தென்மொழி

வீரராய் நிமிர்ந்து இனப்பணி ஆற்றுவீர்!

ஏளனப் படுத்துவர்;
இகழுவர்; புண்பட
இழிவுரை பற்பல கூறுவர்!
கேளெனப் படுத்தவர்
கிளைபல மாறுவர்;
கீழ்மைப் பழிகளைச் சுமத்துவர்!
வாளெனக் குடைகுவர்;
வருக வருகென
வரும் பகைக்(கு) அடைத்ததாழ் திறக்குவர்!
தேளெனக் கொட்டுவர்!
திகைப்பிலா(து) இனப்பணி
செய்(து)அருங் கடமையை ஆற்றுவீர்!

கொஞ்சமும் அன்பிலாக்
கொடுமையின் வெதுப்பொடு
கொள்கையைப் புதுவதாய் அலசுவர்!
வஞ்சமும் இரண்டக
வன்மையும் கொண்டராய்
வதைபடப் பழமையும் கிளறுவர்!
நெஞ்சமும் கொதித்திட
நீர்மையும் புகைந்திட
நெருக்கடி பற்பல புகுத்துவர்?
வெஞ்சமர் பொதுவினை!
வீரராய் நிமிர்ந்ததை
நிகழ்த்துவீர்! அவை புறந் தள்ளுவீர்!

சுவடி : 24
ஓலை : 11

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
உருபா:2-00

Scanned with CamScanner

நமக்கு வந்த மடல்கள்.

○ : 1339 : பேரன்பின் ஐயா, வணக்கம். தாங்கள் விரும்பியது போலவே தேர்தல் முடிவுகள் உள்ளன என்று நினைக்கிறேன். கலைஞர் அரசு, தென்மொழி, தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டு வளர்ச்சிக்கு ஏதாவது செய்யுமானால் மிகவும் மகிழ்வேன்.

—த. அன்பழகன். மஞ்சள் நீர்க்காயல்.

○ : 1340 : தகைமிகு ஐயா. தங்கள் பிறந்த நாளில் என் இனிய வாழ்த்துகள், தமிழ் வாழத் தாங்கள் பல்லாண்டு வாழவேண்டும் என்று வாழ்த்துகிறேன். இறையருளை வேண்டுகிறேன். தங்கள் உண்மையுள்ள.

—மா. பார்வதி, க. மு. தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

○ : 1341 : அன்பு ஐயா அவர்களுக்கு, தமிழ் போல் என்றும் வாழ என் அன்பான வாழ்த்துகளை வழங்குகிறேன். அன்புடன், —ஆ. சண்முகம். தமிழ்ப் பல்கலைக் கழகம். தஞ்சை.

○ : 1342 : மாண்புநிறை ஐயா, வணக்கம். நாடு, மொழி, இன நோக்கில் விடுதலை காண அயராதுழைக்கும் தங்களின் பிறந்த நன்னாளில் எங்களின் (என் இல்லத்தவரின்) நெஞ்சார்ந்த வாழ்த்துகள். தமிழே! உயிரே! வாழ்க! வெல்க! அன்புடன்,

—கவின். (பெ. இராமலிங்கம்), தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

○ : 1343 : அன்புள்ள ஐயா, வணக்கம். தாங்கள் எல்லா நலங்களும் பெற்றுப் பல்லாண்டுகள் வாழத் தமிழன்னை அருள் புரியுமாறு வேண்டுகிறேன். தங்களுக்கு, எங்களின் அன்பு கலந்த பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்ளுகிறோம். நன்றி. என்றும் தங்களை மறவா,

—பொற்செழியன், சேரலாதன், வெங்காலூர்-1.

○ : 1344 : பேரன்புடைய ஐயா அவர்களுக்கு வணக்கத்துடன் எழுதிக்கொண்டது.

தங்களுடைய ஐம்பத்து ஏழாவது அகவை தொடங்கும் இந்நாளில் உங்களை நானும் குடும்பத்தார் அனைவரும் நண்பர்களும் உளமாற—"வாழ்க வளமுடன்"—என்று வாழ்த்தி, உங்கள் உடல் நலம் சிறக்கவும், தங்கள் புகழ் உயரவும், எண்ணங்கள்—ஈடேறவும், நீண்ட வாணாட்காலம் பெறவும் எல்லாம் வல்ல இறைவனை வணங்குகின்றோம்.

ஐயா, தங்களுடைய உண்மையான பொது நலத் தொண்டில்-தொடக்கம் முதல் இன்றுவரை பலப்பல எதிர்ப்புகளை, தொல்லைகளை, ஏச்சு-பேச்சுகளைப் பெற்றிருப்பினும், கடந்த ஐம்பத்து ஆறுவது அகவையில் ஏற்பட்ட இன்னல்கள், நெருக்கடிகள் இது நாள்வரை ஏற்பட்டிருக்கா என்று எண்ணுகின்றேன். இதைப் போல் சூழல்கள் எதிர்காலத்தில் அமையாதிருக்க வேண்டும் எனவும் வேண்டுகின்றேன்.

தென்மொழிக் குடும்பம் என்ற தேன் கூட்டை, நடுவண் அரசு-அதன் அதிகாரத்தாலும், அடக்கு முறையாலும், முறையற்ற வன்முறை நடவடிக்கைகளினாலும், சிதைத்துச் சீரழித்துள்ளது. இந்த நிலையை மீண்டும் மாற்றி, முந்தைய நிலைக்கு வளர்த்து எடுக்க உறுதுணையாய் இருப்பேன் என்று உறுதி கூறுகின்றேன். நன்றி. அன்புடன், —நாரா. மகிழ்நன், திருச்சி-14.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

(தொலைபேசி : 847829

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்

சுவடி 24] உ0கசு மீனம் (மார்-ஏப், 89') [ஓலை: 11

முன்பு போல் ஆட்சி கவிழ்க்கப் பட்டால், அடுத்து நடப்பது வேறு!



இந்திய நாட்டில் பெயருக்குத்தான் குடிநாயக (சனநாயக) அரசு என்று சொல்லப் பெறுகிறதே தவிர, நடப்பதெல்லாம் முதலாளிய—வல்லதிகார— அனைத்ததிகார (சர்வாதிகார)ப் பார்ப்பனீய ஆட்சிதான் என்பது அனைவருமே அறிந்த ஒன்றாக இருக்கிறது. பதவியதிகாரத்தின் தலைமையிடத்தில் இருப்பவர்கள் தங்களுக்குப் பிடிக்காத எந்தச் சூழ்நிலையாக இருந்தாலும் சரி, அஃது எதிர்க்கட்சிக்காரர்கள் ஆள்கிற மாநிலமாக இருந்தால் அதை உடனே அழித்தொழித்துவிடவும், உடனே குடியரசுத் தலைவர் ஆட்சி என்கிற பெயரால், ஒரு பூசாரி ஆளுநரை அங்கு அனுப்பவும், அவருக்குத் துணையாகத் தங்களுக்கு வேண்டிய இரண்டு மூன்று பார்ப்பனச் செயலாளர்களை அமர்த்திக் கொள்ளவும், அடுத்துத் தங்களுக்குப் பிடித்தமான, வாய்ப்பான ஓர்

ஆட்சிச் சூழ்நிலையைத் தங்கள் பணவலிவால் உருவாக்கிக் கொள்ளவும் இந்த நாட்டில் முடிகிறதென்றால், இங்கு நடப்பதைக் குடிநாயகம் (சனநாயகம்) என்பதை எவருமே ஒப்புக் கொள்ளமாட்டார்கள்.

இந்திரா காலத்தில் இவ்வாறு கவிழ்க்கப்பட்ட மாநில அரசுகள் ஏராளம். 1975-இல் தமிழ்நாடு அரசு(கலைஞர் ஆட்சி) அதற்கு முதற்பலியானது. பின்னர் 1980-இல் சரத்பவார் முதலமைச்சராக விருந்த மகாராட்டிரம், பிரகாசுசிங் தலைமை தாங்கிய பஞ்சாப், சுந்தர்லால் பட்வா முதலமைச்சராக இருந்த நடுவண்பைதிரம் (மத்திய பிரதேசம்), நிலமணி ரவுத்திரி முதலமைச்சராக ஆண்ட ஒரிசா, ராம்நரேசு யாதவ் ஆட்சியேறிய வடப்பைதிரம் (உத்திரப் பிரதேசம்), பாடிபாசு படேல் முதன்மை தாங்கிய குசராத், ம. கோ. இரா. (எம்.சி.ஆர்.) தலைமை பூண்ட தமிழ்நாடு (2-ஆம் முறை), பெய்ரான் சிங்சேக் ஆளுமை செய்த இராசத்தான் ஆகிய மாநிலங்களும், அதன் பின்னர் 1983-இல், கர்பூரிதாகூர் ஆட்சியேற்றிருந்த பீகார், டி. இராமச்சந்திரன் ஆட்சிக் கட்டிலேறிய புதுச்சேரி ஆகிய மாநிலங்களும், மீண்டும் 1984-இல், தர்பராசிங் தலைமையிலான பஞ்சாப், நர் பகதூர் பண்டாரி வீற்றிருந்த சிக்கிம், பரூக் அப்துல்லா ஆட்சி பூண்ட சம்முகாசுமீர், என். டி. இராம இராவ் தலைமை தாங்கிய ஆந்திரா ஆகிய மாநிலங்களும் அவ்வம்மையாரின் வெறுப்புக்கு ஆளாகி அடித்து வீழ்த்தப்பட்டன.

இந்த ஆட்சிக் கவிழ்ப்பு வரலாறுகளை அறிந்த அரசியல் பார்வையாளர் எவரும், இவ்வீழ்ச்சிக் கதைகளை ஞாயம் என்று மதிப்பிட்டு விட முடியாது. அத்துணை அழிம்புகளின் மேல் கட்டப் பெற்று வருகின்ற வல்லதிகார ஆடம்பரப் பெருமாளிகை தான் இராசீவின் பரம்பரை ஆட்சி அரண்மனை. இந்த வகையில் தாய்க்குப் பிள்ளை சளைத்ததில்லை என்பதை ஆட்சிக் கவிழ்ப்பால் மட்டுமன்று, கருப்புச் சட்டங்களாலும், கடுமையான ஆட்சியதிகார ஊடுருவல்களாலும் மெய்ப்பித்து வருபவர் அவர்: பஞ்சாபில் கடந்த ஒன்றரை ஆண்டுகளாகக் குடியரசுத் தலைவர் ஆட்சி! ஆனால் மூன்று ஆண்டுகள் வரை அதைத் தொடர்ந்து நடத்த, தனி அரசியல் கருப்புச் சட்டத்தை இயற்றிக் கொண்டது, இராசீவ் ஆட்சி!

தமிழகத்தில் பஞ்சாபைப் போன்ற ஒருநிலை எப்பொழுதுமே வந்ததில்லை. இருப்பினும் 1988 ஓராண்டு முழுவதும் குடியரசுத் தலைவர் பெயரால் ஆளுநர் ஆட்சி நடத்தப் பெற்றது. தமிழகத்தை நிலையான அடிமைத் தளையில் வைத்திருக்க-பேராயக் கட்சி ஆட்சியை வலுக்கட்டாயமாக மக்கள் மேல் திணிக்க, இங்கே பல வகையிலும் பலகோடி உருபா செலவு செய்து, முயற்சிகள் மேற் கொள்ளப்பெற்றன. கடந்த சட்டமன்றத் தேர்தலுக்காக மட்டும் இராசீவ் 12 தடவைகள் இங்கு வந்திருக்கிறார். அவர் வரவுக்காக ஒரு தடவைக்கு 6 கோடி முதல் 7 கோடி உருபா வரை செலவிடப் பெற்றிருக்கிறது. இது முழுக்க முழுக்க

அரசுப் பணம்: அஃதாவது மக்கள் வரிப் பணம். இத்தேர்தல் பணி ஓர் இந்தியத் தலைமையமைச்சருடைய பணியன்று. இருப்பினும் இவர் மாவட்ட ஆட்சித் தலைவர்போல், மாநில ஆட்சியைக் கைப்பற்ற, ஆர்ப்பாட்டமாகச் செயல்பட்டார். இங்குள்ள கட்சித் தலைவர்கள் அவரைத் தெருத் தெருவாக, வீடு வீடாக அழைத்துச் சென்று ஒப்போலை கேட்கச் செய்தனர். இவருடைய தாய் கூட இத்தகைய ஆரவார வேலைகளைச் செய்ததில்லை. அது மட்டுமன்று. வேறு எந்த நாட்டிலுமே இல்லாத கொடுமை இது. ஏறத்தாழ 100 கோடி உருபா அரசுப் பணத்தைத் தம் கட்சிப் பணத்தைப்போல், தாராளமாகச் செலவிட்டுக் கொண்டு தில்லிக்கும் தமிழ் நாட்டிற்கும் நகர உந்தைப்போல் வானூர்தியைப் பயன்படுத்திக் கொண்டு, ஒரு படை பரிவாரத்துடன் 12 முறை வந்துபோக, இராசீவுக்கென்ன தமிழக மக்கள் மேல், தமிழ் நாட்டின் முன்னேற்றத்தின் மேல் அவ்வளவு அக்கறை? அது, வேறொன்றுமில்லை; தமிழர்களை என்றென்றும் தங்கள் உரிமைகளுக்காகப் போராடும்படி விட்டுவிடக் கூடாது என்பதும், அவர்களை என்றென்றும் நிலையான அடிமைகளாகவே வைத்திருக்கவேண்டும் என்பதுந்தாம்! இதுதான் அவரின் உள்நெஞ்சத்தில் ஊசலிட்டுக் கொண்டிருக்கும் கருத்தாகும்; நோக்கமாகும்!

இந்தியாவிலேயே பார்ப்பனியத்திற்கும் வடநாட்டு முதலாளிய ஆட்சிக்கும் சாவு மணி அடிக்க முயற்சி மேற்கொள்ளப்படுவது தமிழ் நாட்டில் மட்டுந்தான்! தமிழர்கள்தாம் தங்கள் மொழி, இன, நாட்டு உரிமைகளுக்காக இங்கே போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை எப்படியேனும் இங்குள்ள விபீடணக் கும்பலை வைத்துக் கொண்டு, நிலையாக அடக்கி ஒடுக்கி விட வேண்டுமென்று கனவு காணுகிறது இராசீவ் கும்பல்!

இந்த நிலையில் நீண்ட நெடுங்காலத்திற்குப் பின், அஃதாவது பதின் மூன்றாண்டுகளுக்குப்பின், இராசீவின் அம்மா இந்திரா காலத்தில் இறக்கிவிடப்பட்ட தி.மு.க., தம்முடைய ஆட்சிக் காலத்தில் மீண்டும் மேளதாளத்துடன் ஆட்சி அதிகாரத்தில் கால் வைக்கிறது என்றால், இராசீவால் பொறுத்துக் கொள்ளமுடியுமா? முடியாதுதான்! தாமும் எவ்வளவோ முண்டி மூச்சுப் பிடித்துக் கொண்டு மூப்பனார் துணையுடனும் திண்டிவனத்தார், குமரியார் தாங்குதல்களுடனும், சிதம்பரனார் கெட்டிக்காரக் கட்டியங்காரத் தனத்துடனும், தம் மனைவி சோனியாவுடன் தமிழகம் முழுவதும் தேர்தல் ஊர்கோலம் வந்தார்; ஏழைகளின் மேல் அன்பிருப்பதுபோல் நாடகம் ஆடிக் காட்டினார்.

ஆனால் இவரும் இவரின் கட்சிக் கோடரிக்காம்புகளும் எதிர்பார்த்ததற்கு நேர் எதிராக, இங்குள்ள மக்கள் ஏதோ ஒரு காரணத்தினால் தி.மு.க.வை ஆட்சியில் அமர வைத்தனர். கலைஞர் ஆட்சிக் கட்டிலேறினார். அன்றிலிருந்து இராசீவும் அவர் கட்சிக் கேடயங்களும் ஒன்றைப் பார்த்து ஒன்று பொருமிக் கொண்டன; கருவிக் கொண்டன; பற்களை நறநறவென்றும் மென்று

துப்பிக் கொண்டன. 'உன்னால்தான் நான் கெட்டேன்; என்னால் தான் நீ கெட்டாய்—என்றெல்லாம்' அவை கூறின; அம்பல் தூற்றின. ஆனால் காலப்போக்கில், ''இனி விளைந்ததைக் கொட்டி அளந்து கொண்டிருப்பதில் பயனில்லை; விளைவிப்பதைத் தாறுமாறாக்குவோம்; சிதைப்போம்; ஆக்கிய சோற்றுச் சட்டியை உடைப்போம்'' என்று மறைமுக உறுதியெடுத்துக் கொண்டு, சட்டமன்றத்தில் புதிதாகக் கால்வைத்த ஆரிய மாரீசையையும் அவருக்குப் பக்கமேளங்களாக உள்ள திருநாவுக்கரசு, சாத்தூர் இராமச்சந்திரன், குமரிஅனந்தன், இராதா, அண்ணாநம்பி, செங்கோட்டையன் இன்னோரன்ன வீடணப் பிரகலாத சுக்கிரீவப் பிறப்புகளையும் தூண்டிவிட்டு, முதலமைச்சர் கலைஞர்க்கு முன்னாக நின்று முரண்டு பிடிக்கவும், முடிந்தால் முரட்டுவலி காட்டவும், இன்னும் முடிந்தால் கலைஞர் மூக்கை உடைக்கவும் (இங்கு மூக்குடைப்பை மானக்கேடு செய்தல் என்னும் பொருளில் கொள்க) திட்டம் இடப்பட்டது; திட்டமிட்டபடி உணர்ச்சித் தூண்டல்கள், வாய்க் கொப்பளிப்புகள், செயலிழிவுகள் முறைப்படி கடந்த 25-3-89-இல் சட்டமன்றத்தைக் களரி மன்றமாக்கின.

அடுத்து, மக்கள் மன்றத்தில் அ.தி.மு.க.வினரும், இந்திராப் பேராயத்தினருமாகச் சேர்ந்து, இல்லாத பழிகளைச் சொல்லாத சொற்களால் கலைஞர் மேலும், அவர் ஆட்சி மேலும் ஏற்றிக் கூறினர். இவ்வாறாக, மக்களால் அரியணையேற்றப் பெற்ற தி.மு.க.வை இராசீவ், ஏதோ ஒரு காரணம் காட்டி இறக்கிக் காட்டப் பார்க்கின்றார். இத் திரைமறைவு நாடகத்தின் இறுதிக் காட்சி எப்படியிருக்கும் என்று இப்பொழுது கூற முடியவில்லை யானாலும், இராசீவுக்குக் கட்டியங்காரராக இருந்து கோமாளிக் கூத்து நடத்தும் தஞ்சை நிலக்கிழார் மூப்பனாருக்கு ஒன்று சொல்லிக் கொள்வோம்:

''இந்திய மாநிலச்சட்ட மன்றங்களில் அடிதடிகள், செருப்பு வீச்சுகள், ஒலிவாங்கிகளைப் பிடுங்கியடித்தல்கள் போன்றசெயல்கள் பொதுவான நிகழ்ச்சிகளாகிவிட்டன. ஏன், பாராளுமன்றத்திலேயே இவை போன்ற நிகழ்ச்சிகள் அவ்வப்பொழுது நடப்பது இயல்பாகிவிட்டது. எதிர்க்கட்சிகள் ஆட்சி நடத்தும் ஆந்திராவிலும், கேரளாவிலும், கருநாடகத்திலும், அரியானாவிலும், மேற்கு வங்காளத்திலும், எதிர்க்கட்சியாக இருந்துவரும் இந்திராக் கட்சியினர் செய்து வரும் கலகங்கள், கலவரங்கள், மற்றும் சட்டத்திற்குப் புறம்பான, குடியரசு அமைப்புக்கே மாறான செயல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அண்மையில்கூட இராசத்தான் சட்ட மன்றத்திலும் உறுப்பினர்கள் கூச்சலும் குழப்பமும் ஏற்படுத்தியதாகப் பலமுறை பேரவை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அதே முறையிலேயே—தமிழகத்திலும், அ.தி.மு.க.வைத் தூண்டிவிட்டுப் பேராயக்கட்சி செயல்படத் தொடங்கிவிட்டது. நாள் தோறும் அக்கட்சியின் தலைவர் இராசீவின் தூண்டுதலால் நடக்கும் அடாவடித்தனமான, அரம்பத்தனமான நிகழ்ச்சிகள்

Scanned with CamScanner

பாராளுமன்றக் குடியரசு அமைப்பையே அவமதிக்கும் போக்கை உறுதிப்படுத்துகிறது.

''செய்வதையெல்லாம் செய்துவிட்டு, நடுவண் அமைச்சர் திணேசு சிங்கை அனுப்பிச் செய்தியாளரிடம் 'இந்த (தி.மு.க.) ஆட்சி-மக்களாட்சிக்கு மாறான ஆட்சியென்றும், அரசியல் சட்டத்திற்குப் புறம்பான ஆட்சியென்றும், இதைப் பதவியிலிருந்து அகற்றவேண்டும் என்றும் சொல்ல வைத்துள்ளது தில்லியாட்சி; இதை வி.பி.சிங், முன்னாள் நடுவண் அமைச்சர் சி. சுப்பிரமணியம், முன்னாள் உச்சநெறி மன்ற நடுவர் வி.ஆர். கிருட்டிணையர் முதலியோர் கூடக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் கண்டித்துள்ளனர்.''

இனி, இவ்வளவுக்குப் பின்னும் கலைஞரின் ஆட்சி, ஏதோ ஒரு காரணம் கூறி 1975 ஆண்டுப் போல், கலைக்கப்பட்டால், தமிழ் நாட்டில் நடப்பதே வேறாக இருக்கும் என்பதை மட்டும் இப்பொழுதைக்குச் சொல்லிவைக்கிறோம். அந்த நிலையை இராசீவ் வருவித்துக் கொள்ளமாட்டார் என்றே நம்புகிறோம்.

நடத்தத்தான் முடியவில்லை! நடத்தித்தான் ஆகவேண்டும்!

தென்மொழியைத் தொடர்ந்து நடத்துவது அல்லது நிறுத்துவது பற்றிய நம் முடிவைப் பற்றிச் சிலர் கவலைப்படவில்லையானாலும், பலர் மிகக் கவலை கொண்டு சிந்திப், பதைக் கடந்த மூன்று மாத இடைவெளியில் நாம் நன்கு உணர முடிந்தது. உண்மையிலேயே நமக்கு இந்நிலை ஒரு பெரிய அறச்சிக்கலாக (தர்ம சங்கடமாக)வே உள்ளது.

தென்மொழியை நடத்த முடியவில்லை என்பது ஓர் அகச் சூழ்நிலை. ஆனால் அதை நடத்தித்தான் ஆகவேண்டும் என்பது ஒரு புறச் சூழ்நிலை,

அகச் சூழ்நிலையில் ஒரு வகையில் நம் தனி நிலையும் கலந்து இருக்கும்; புறச் சூழ்நிலையில் முழுவதும் பொது நிலையே சூழ்ந்திருக்கும். எனவே, எவ்வகையிலும் அகச் சூழ்நிலைத் தாக்கத்தினும், புறச் சூழ்நிலைத் தாக்கத்திற்கே நாம் முதலிடம் தர வேண்டும் என்பது நம் அசைக்க முடியாத கொள்கை!

இருப்பினும் அகச் சூழ்நிலை, புறச் சூழ்நிலைக்குக் கடைகால்—அடிவாரம்—போன்றது! எவ்வளவுதான் புறச் சூழ்நிலையைப் பற்றி ஒருவர் நினைத்துக் கொண்டிருந்தாலும், அவருக்குற்ற அகச் சூழ்நிலையை அவர் மறந்துவிட முடியாது! இந்த இரண்டு நிலைகளையும் பற்றி நாம் கடந்த நாற்பது ஆண்டுகளில் மிகவும் தெள்ளத் தெளிவாக உணர்வால் உணர்ந்தும், அறிவால் அறிந்தும், செயலால் பட்டும் கெட்டும் தேறியிருக்கிறோம்.

என்னென்ன காரணங்களால் தென்மொழிப் பணியை நாம் நிறுத்திவிட எண்ணங் கொண்டோமோ, அவற்றிற்கு நேர்

எதிர்க் காரணங்களால் அதைத் தொடர்ந்து நடத்தவும் வேண்டியுள்ளது!

அவ்விரண்டு கூறுகளையும் ஒருவாறு இங்கே பட்டியலிட்டு ஒப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்!

இதழ்களை நிறுத்தவேண்டுமென முடிவு எடுப்பதற்கான அகக் காரணங்கள்:

1) இதழ்களின் பொருள் நிலை மிகவும் கேடாக உள்ளது. வரவேண்டிய நிலுவை ஏராளமாக உள்ளது.

2) அலுவலக நிலையில், இதழ்ப் பணிகளில் நம்முடன் ஒத்துழைக்க சரியான பணியாளர்கள், துணையாளர்கள் இல்லை. நாமே அனைத்துத் தொழில் நிலை, இதழ் நிலை, தொண்டு நிலை — ஆகியவற்றில் ஓய்வின்றிப் போதிய உதவியோ, ஒத்துழைப்போ, கட்சி, சாதி, மத ஆதரவோ இன்றித், தன்னந்தனியாக உழலவும் உழைக்கவும் வேண்டி உள்ளது.

இதழ்களை நிறுத்த வேண்டாமென முடிவு எடுக்க வேண்டிய புறக் காரணங்கள்!

1) தமிழகத்தின் பொருள் நிலை வீழ்ச்சி அதனினும் கேடாக உள்ளது; தில்லிப் பார்ப்பனீய முதலாளிய அரசு தமிழர்களைச் சுரண்டிக் கொண்டு போகும் கொள்ளையை நாம் மக்களுக்கு எடுத்துக்கூறி அவர்களை விழிப்படையச் செய்தாக வேண்டி இருக்கிறது.

2) தமிழின மக்களுக்கும் உண்மையாக அரசியல் சாராத நிலையில் உழைக்கின்ற தொண்டர்கள், அறிஞர்கள், தலைவர்கள் இன்மையால், மக்களுக்கு விழிப்புணர்வும் அறிவுணர்வும், உரிமையுணர்வும் ஏற்படுத்த இயலாமல் உள்ளது. நாமும் இதில் ஈடுபடவில்லையானால், மக்கள் விழிப்புறுவது மேலும் பல நூற்றாண்டுகளுக்குத் தடைப்பட்டுத் தேக்கமுறும். அதற்கு நம் இதழ்க் கருத்துகள் ஒருவாறு மெல்ல மெல்ல வேனும் தொடர்ந்து அவர்களுக்குப் போய்ச் சேர்ந்தாகவேண்டும். அவர்களும் முன்னேற்ற நிலையில் நம்மைப் போல் ஆதரவற்றவர்களே! கட்சியும் சாதியும் மதமும் அவர்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனவேயன்றி அவர்களுக்காகப் பயன்படவில்லை.

3) நம் தொண்டைச் செய்யப் போதிய கருவிகள் இல்லை. இருக்கின்ற கருவிகளை வைத்துக் கொண்டு, குறைந்த அளவுதான் செய்யமுடிகிறது. இதனால் பெரும்பயன் ஏற்பட வழியில்லை.

3) இச்சிறு அளவுத் தொண்டும் செய்யப் பெறவில்லையானால் உண்மையான விளைவு எப்பொழுதுமே ஏற்படாமல் போய்விடும். எனவே, இருப்பதை வைத்துக் கொண்டேனும் ஏதாவது தொடர்ந்து செய்து கொண்டுதான் இருக்க வேண்டும் என்னும் நிலையே நாட்டில் உள்ளது.

நம் துன்பங்கள் மிகுதிதான்; பெரிதுதான். இருப்பினும் நம் இன மக்கள் படும் துன்பமோ அதனினும் பன்மடங்கு மிகுதி; அளவிறந்தது; மிகமிகப் பெரிது! எனவே, அவர்களுக்கு உழைப்பதைவிட உலகில் பீடுடையதும் பெருமை மிக்கதுமான பணி வேறு இல்லை. (குறள் : 1021); உழைப்பாலும் அறிவாலுந்தாம் தாழ்ந்த நலிவுற்ற ஓர் இனத்தை நெடிய முயற்சி செய்து முன்னேற்ற முடியும். (1022); தான் பிறந்த குடிக்கு நேர்ந்த தாழ்ச்சியை இல்லாமற் செய்ய உழைப்பதே அதிலுள்ள ஒவ்வோர் ஆண் மகனின் தலையாய கடமையாகும். (1026); அளவு மீறிய வீர உணர்வால் போர் முகத்துக்கே சென்று போராடத்துணிந்த வன்கண் மறவனின் தோள்மேல் தங்கிய சுமைபோல, தன் இன மக்களைக் காக்கின்ற முயற்சியிலும், அக் கடமையில் தானே முன் வந்து தம்மை ஈடுபடுத்தி உழைக்கின்ற பொதுநலத் தொண்டனுக்கும், அனைத்துச் சுமைகளும் அவன் தோள் மீதே வந்து கனக்கும். (1027); அத்தகைய ஒருவனுக்கு மழை, பனி, வெயில், குளிர், இரவு, பகல் என்னும் காலங்கள் இல்லை; தன் தனிப்பட்ட வாழ்வுக்கு என்று கருதிக் கொள்ளும் மான உணர்வு என்பது கூட இல்லை. (1028); அவன் உடம்பு துன்பங்களுக்கே கொள் கலன். (1029) அப்படிப்பட்டவன் தன் துன்பத்தைப் பெரிதாகக் கருதி, அத்தொண்டுப் பணியைத் துறக்கக் கருதுவானானால், அவன் துன்பத்தினும் பெரியதான துன்பத்தால் அவன் இனமானது வீழ்ந்து படும். (1030)!

என் செய்வது? திருவள்ளுவப் பெருந்தலைவர் கூறும் இக்கருத்துரைகள் அன்றிலிருந்து இன்று வரை, என் உள்ளம், அறிவு, உயிர், உடலியக்கம் அனைத்திலும் பற்றி இருந்து, அணு அணுவாய் ஆட்சி செய்கின்றன. அவ் வலிய ஆட்சியினின்று ஓர் அரைக்கணமும் என்னால் அகன்று இருக்க முடியவில்லை. அகன்றால் உயிர் வாழ்வேனோ என்பதை உறுதியாகச் சொல்லமுடியாது.

மேலும், ''இதழ்களை நிறுத்திவிடும் நிலை உள்ளது'' என்று தெரிவித்தவுடனேயே, என் போலவே பலரும் ஆராத்துயர் கொண்டு நேரிலும் மடல் வழியாகவும் உதவி வழியாகவும் தெரிவித்த துன்புரைகளை தனிப்பட்ட என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவர்களின் உதவி உறுதிப் பாடுகள் என்னை நிலைகுலையச் செய்துவிட்டன. மேலும் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்றுவிட்டேன்!

எனவே, இதழ்களைத் தொடர்ந்து நடத்துதற்கு வேறு வழி வகைகள்தாம் எவை என்பதை மேலும் மேலும் ஆராய்ந்து, அன்புயிர்கள் தம்மைக் கலந்து, உரையாடித் தேர்ந்து தெளிந்து முடிவு செய்ய விரும்புகின்றேன். அதன் விளைவாக இதழ்களைத் தொடர்ந்து நடத்தத் துணிவு கொண்டுவிட்டேன். இவை நிறுத்தப்பட்டுவிட வேண்டும் என்று நச்சாசை கொண்டிருந்தவர்கள் நடுக்கமுறும்படி, மெய்ம்மைத் தமிழன்பர்கள் சிலரின் உண்மை உதவிகளால், தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்கள் தொடர்ந்தும், புதிய பொலிவுடனும், பொதுமக்களைக் கவரும்படியான சில மாற்றங்களுடனும், மேம்பட்ட முறையில் வெளிவர அனைத்து முயற்சிகளும் செய்து வருகின்றேன்.

திருக்குறள் பேராசான் 'நாணுடைமை' அதிகாரத்துள் "குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின்" (1019) என்று கூறியதை என் உள்ளம் எந்த நொடியும் மறந்ததில்லை. என் பொருட்டாகவே, அல்லது என்னைப்போல், தங்களை இனத்துக்காகவே முழுவதும் ஒப்படைத்துக் கொண்ட ஒருவர் பொருட்டாகவே, இக்கருத்தைத் திருவள்ளுவப் பேறு வெளிப்படுத்தியிருக்கவேண்டும் என்று கருதுகிறேன். எனவே, என் மொழிக்கும், என் மக்களுக்கும், என் நாட்டுக்கும் உழைப்பேன் என்று எங்ஙன் என் அறிவுணர்வுத் தொடக்கச் சிற்றிளமைச் சிறுபோதுப் பருவத்தில் உள்ளுணர்வில் உறுதி கொண்டேனோ, அதன்பின் அறிவு விளர்ந்த நோக்கில், 'என்மொழி, என்னினம், என் நாடு நலிகையில் எதனையும் பெரிதென எண்ணமாட்டேன்' என்று, பிறவுலகியற் கூறுகள், வாழ்வியல் தேவைகள் அனைத்தையும் புறந்தள்ளி, இவற்றையே கூர்த்து நோக்கினேனோ, இனி, அதனின்றும் மேம்பட்டு, என் உயிரியல் நலன்களையும் தவிர்த்துவிட்டு, 'எனக்கென எதுவுமில்லை, இவ்வினங்கெட்ட தமிழனின் நிலை தவிர'—என்று கொள்கையாகவே ஆனேனோ, அங்ஙனே இன்றும் இனி என்றும் என் நிழலுரு இந்நிலத்தில் அசைந்து கொண்டிருக்கும் வரை, கொண்ட கொள்கையைப் பிழைத்திடல் மாட்டேன், மாட்டேன் என்று உயிருறுதி பூண்டுவிட்டேன்.

எனவே, அன்பர்கள் ஆறுதல் உறுவார்களாக! அமைவு கொள்வார்களாக!

ஆனால், இந்நிலையில் மட்டும் இனி, இது, நடந்துவிடும் என்று நினைத்து ஒரேயடியாக, அன்பர்கள் தங்களை ஒதுக்கிக் கொண்டு, எட்டவே நின்றுவிடுவதானால், எப்படி? மேலே கூறிய என் எண்ணங்கள், உணர்வுகள், கொள்கைகள் முழுவதும் எனக்கு மட்டுந்தானா? உங்களுக்கு அவை இல்லையா? எண்ணிப் பாருங்கள்! முனைந்து செயல்படுங்கள்! நீங்கள் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு நூறு உறுப்பினர்களை அடுத்து வரும் ஒரு மாதத்திற்குள்ளாகவோ, மூன்று மாதங்களுக்குள்ளாகவோ, சேர்த்து ஏன் இவ்விதழ்களை நிலை பெறச் செய்யக் கூடாது? நாம் நமக்கு மட்டுந்தான் வாழவேண்டுமா? அல்லது நம் இனத்துக்காகவுமா? முடிவு செய்வதும் முனைவதும் முடிப்பதும் உங்கள் பொறுப்பு; கடமை! கொள்கை! பிறபின்.

பெருஞ்சித்திரனர் நேருரைகள்!

('உண்மை' இதழில் வெளிவந்த நேருரைத் தொடர்ச்சி)

நம்முடைய பொதுச் செயலாளர் அவர்களுடைய சுற்றுப் பட்டியலும் வருகிறது. நம்முடைய 'விடுதலை'யிலே: ஐயா அவர்களைப்போல் அதிலே நாம் சளைக்கக்கூடாது என்று எண்ணி ஏராளமான மக்களை ஒவ்வொரு நாளும் சந்திக்கின்ற பொதுத் தலைவராக இன்றைக்கு வீரமணி அவர்கள்தாம் இருக்கின்றார்கள். மற்ற எந்தத் தலைவரும் அத்தனைப் பொது மக்களைப் பார்ப்ப தில்லை. ஒவ்வொரு மாதமும் இலக்கக்கணக்கான பொது மக்களைத் தமிழ் நாட்டிலே சந்திக்கிறார்! அவர்களோடு அவர்களின் சிக்கல்களை நேரிடையாகப் பகிர்ந்துகொண்டு உண்மையான இன முன்னேற்றத்திற்காகக் கருத்துகளைச் சொல்லுகின்றார். இன்னொரு வியப்பான செய்தி என்னவென்று சொன்னால், பெரியாரவர்கள் மேடையிலே பேசுகிறபொழுது ஏராளமான சான்றுகளை மூட்டையில் போட்டுக் கட்டிக்கொண்டு வந்து, அவற்றையெல்லாம் எடுத்துக்காட்டி, மக்களுக்குப் படித்து உணர்வுகளைத் தூண்டும்படி அந்தக் கருத்துகளைச் சொல்வார்கள்.

அதை நான் வேறு யாரிடத்தும் நம் நாட்டிலே பார்த்த தில்லை. அந்த நிலையை மீண்டும் நம்முடைய பொதுச் செயலாளர் அவர்களிடத்திலேதான் பார்க்க முடிகிறது. வேறு எந்தத் தலைவரும் வாய்க்கு வந்ததைப் பேசுவார்களே தவிர, அன்றைக்கு வந்த செய்தித்தாளில் ஏதாவது செய்தி வந்தால் அதைப்பற்றிப் பேசுவது, மலிவான செய்திகளையும், மக்களுக்குக் கவர்ச்சியான செய்திகளையும் சொல்வதிலேதான் அவர்களுக்கு நாட்டம் இருக் கிறதே தவிர, அடிப்படைத் தேவைகள், அவர்களுடைய உண்மையான நலிவுகள், அவர்களுடைய உண்மையான முன் னேற்றத்திற்கு என்னென்ன என்பவை பற்றியெல்லாம் சிந்திக்கிற ஓர் அறிவு உணர்ச்சி மற்ற யாரிடத்தும் இருப்பதாய் எனக்குத் தெரியவில்லை; நான் யாரையும் குற்றம் சொல்லவில்லை; இப்படி நிறைவாகச் செய்கின்றவர் வீரமணி அவர்கள்தாம். இரண்டு மூட்டைப் புத்தகங்களை எடுத்துக் கொண்டு வருகிறார். இந்தப் புத்தகங்களிலிருந்து செய்திகள்! மக்கள் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதிலே, மக்கள் அறிவு பெறவேண்டும் என்பதிலே அவ்வளவு அக்கறை அவருக்கு.

"ஐயா இப்படி நீங்கள் ஒரு பேராசிரியர் போல மக்கள் மன்றத்தில் பல செய்திகளை இப்படி எடுத்து வைக்கின்றீர்களே! அவர்கள் கேட்டுவிட்டுப் போய்விடுவார்களே தவிர உணர்ந்து கொள்வார்களா ஐயா?" என்று அவரிடத்திலே கேட்டதற்கு அவர் என்ன சொல்கிறார்: 'உண்மைதான் ஐயா நீங்கள் சொல் வது; ஆனால் பத்து இளைஞர்களுக்கு நான் சொல்லுகின்ற அந்த அறிவுக் கருத்துகள் போய்ச்சேரும் போது, அந்தப் பத்து இளைஞர்களும் நாளைக்கு முழுத் தொகையினராக வளர்ந்து நாம் செய்யும் இந்த தொண்டைச் செய்வதற்கு வலுவாக வருவார்-

கள். அறிவு பெற்றவர்களாக வருவார்கள். அறிவோடு கொண்டு மக்களிடத்திலே பரப்புவார்கள் என்பது உண்மைதான்-அப்படி விளைந்திருப்பதையும் நான் பார்த்தேன். நான் தஞ்சைக்குச் சென்றிருந்தபோது திராவிடர் கழகத்து இளைஞர்கள் பலர் என்னை வந்து பார்த்தார்கள். அவர்களெல்லாம் புதிய இளைஞர்கள்தாம் அவர்களிடத்திலே இந்தக் கருத்துகளெல்லாம் நன்றாக வேரூன்றி இருக்கின்றன. அந்த மண்டல் குழு அறிக்கை வெளிவர நடத்திய மாநாடுகள், கூட்டங்கள் ஆகியவற்றில் சொன்ன கருத்துகளையெல்லாம் அவர்கள் சொல்கிறார்கள். அதேபோலப் பார்ப்பனர்-கள் இந்த நாட்டிலே அவர்களுடைய நிலைகளை வலுப்படுத்திக் கொண்டு வருவதையும், அவர்களின் புள்ளி விளக்கங்களையும் நம்முடைய பொதுச்செயலாளர் அவர்கள் வெளியிட்டதை இளைஞர்-கள் புள்ளி விளக்கத்தோடு பேசுகிறார்கள்! இனிமேல் யாரும் ஏமாற்றமுடியாது. கடந்த காலத்திலிருந்த திராவிடர் கழகத் தோழர்கள், அன்பர்கள் வேறு வகையாக இருந்தார்கள். இப்பொழுது அவர்கள் புள்ளி விளக்கங்களைக் கையில் வைத்துக் கொண்டு திரிகிறார்கள்—பேசுகிறார்கள். இதற்குக் காரணம் நம் பொதுச் செயலாளர் அவர்களின் பேச்சுமுறைகளும் அணுகுமுறைகளும்தாம். நான் பொதுச் செயலாளர் அவர்களிடம் சொன்னேன் ''ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று, ஆனால் அவர் ஓய்வு எடுப்பதாகத் தெரியவில்லை. தமிழர்களுக்காக ஓயாது உழைத்துக் கொண்டு இருக்கிறார்.

நேருரை கண்டவர்: எதிர்காலத்தில் நமது முயற்சிகளும் திட்டங்களும் எவையாக இருக்கவேண்டும் என்று தாங்கள் கருதுகிறீர்கள்?

பாவலரேறு: நீங்கள் கேட்ட கேள்வியிலே 'நாம்' என்று குறிப்பிட்டது நம்முடைய திராவிட மக்களை என்ற அடிப்படையிலேதான் என்பதை உணர்கிறேன். தந்தை பெரியாரவர்களின் கருத்து விளக்கம் மக்கள் நடுவிலே நன்றாகப் பரவியிருந்தது எனலாம். இப்போதும் நம்முடைய திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி அவர்களும், கொஞ்ச காலம் அரசாட்சியிலே இருந்த கலைஞர் அவர்களும், பொது நிலைத் துறையிலும், அரசியல் துறையிலும் இந்தத் திராவிட இனம் முன்னேறுவதற்கான அடிப்படை விளைவுகளைச் செய்திருக்கிறார்கள் எனலாம்.

அந்த வகையிலே நம்முடைய மக்களைக் காப்பதற்குச் சில வாய்ப்புகள் கிடைத்திருக்கின்றன. பதவியில் ஒரு கணிசமான அளவு அமர்த்தப்பட்டிருக்கின்றார்கள். நமக்குரிய விழுக்காட்டுப் படி நாம் இன்னும் அந்த உரிமையைப் பெற்றுக்கொள்ளவில்லை. நாம் இவற்றையெல்லாம் மனத்திலே வைத்துக் கொண்டு எதிர் காலத்திலே இன்னும் நாம் என்ன செய்யவேண்டும் என்பதுபற்றி நான் கொஞ்சம் உங்களுக்குச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

எதிர்காலத்திலே மக்கள் இனத்துறையை அஃதாவது குமுகாய நிலையை மட்டுமே கருத்திலே கொண்டால் இன்னும் சிற்றூர்ப்

Scanned with CamScanner

புறங்களிலே இருக்கின்ற மக்களுக்கு இன்னும் கூடுதலான அறிவும் எழுச்சியும் ஏற்படுத்தவேண்டும். பார்ப்பன இயக்கங்களிலே ஆர். எசு. எசு. போன்ற இயக்கங்களிலே அமைந்திருக்கின்ற அந்த இளைஞர் இயக்கங்களை உருவாக்கவேண்டும். திராவிடர் கழகத்திலே தனி ஒரு திராவிடர் கழக இளைஞர் பிரிவு என்ற ஒன்று வேண்டும்.

(நேருரை கண்டவர் குறுக்கிட்டு): இருக்கிறது!

பாவலரேறு : ஓ! இருக்கிறதா! நல்லது: அப்படி இருந்தால் அந்த இளைஞர் பிரிவு சிற்றூர்ப் புறங்களிலே அந்த மக்களை அணுகி அவர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஊட்டவேண்டும். ஆரிய மத கோட்பாடுகளை நாம் அவர்களுக்கு வெளிப்படையாக எடுத்துச் சொல்லி விளக்கம் ஏற்படும்படி செய்யவேண்டும். ஏற்கெனவே தமிழர்களிடத்திலே இருக்கின்ற கடவுள் மத நம்பிக்கைகள் சில உண்டு.

அவற்றில் ஏராளமான ஆரியக் கொள்கைகள் கலந்துதான் இந்துமதம் என்ற ஒரு மதத்தை அமைத்திருக்கின்றார்கள்: அந்த ''இந்து மதம் ஒரு போலித்தனமான ஆரிய மதம்'' என்று நன்றாக தெளிவுபட மக்களுக்கு விளக்கிக் காட்டியாக வேண்டும்; இந்த வகையிலே பொதுமக்களிடத்திலே மூடநம்பிக்கைகள் அகற்றப் படவேண்டும். பகுத்தறிவு உணர்ச்சி ஊட்டப்படவேண்டும்; தன்மான உணர்வு இன்னும் நிறைய அவர்களுக்கு ஊட்டப்பட வேண்டும்!

அடுத்தது நம்முடைய திராவிட கழகத்தினர் கல்வித்துறையிலே இப்போது பொதுப்பணியாகச் செய்து வருகின்ற பல முயற்சிகளிலே உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் போன்றவற்றையும் அமைத்து வருவது ஒரு மகிழ்ச்சிக்குரிய செயலாகும். இன்னும் இதை விரிவாக அரசுத் துணைக் கொண்டு, அல்லது அரசு இதற்கான ஊக்கம் தரும்படியான நிலையை நாம் ஊட்ட வேண்டும். கல்வி நிலையிலே நம்முடைய இனம் இன்னும் மேம்பட்டு முன்னேறவேண்டும். அதற்கு நம்முடைய கழகம் திட்டமிட்டு ஒரு குழுவை ஏற்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன். கல்வி, பொதுப்பணி, அரசுப்பணி போன்ற துறைகளில் நம்முடைய மக்களுக்கு என்னென்ன வகையான தொய்வுகள் ஏற்படுகின்றன என்று ஆய்ந்து, முழுக்க அதற்காகவே அரசோடு போராடிக் கொண்டிருக்கும்படி அந்தக் குழுவிற்கு வாய்ப்பைக் கொடுக்கலாம், அந்தக் குழுவைக் கட்டாயம் ஏற்படுத்தவேண்டும், ஏனென்று சொன்னால் நம்முடைய பொதுச் செயலாளர் அவர்கள் தாமே எல்லாத் துறையிலும் முழுக்க முழுக்க தலையிட்டுத் தீர்ப்பது என்பது இயலாது: இது பெரிய முயற்சி; மக்களுக்குத் தொண்டு செய்யவேண்டும். அரசோடு போராடுவது தொடர்பு கொள்வது என்ற முயற்சியை ஒரு தனிப் பிரிவாக அமைத்துவிட வேண்டும். மிக்க அறிஞர்களை அமர்த்தி, அரசு எந்தெந்தத் துறையிலே நமது மக்களின் முன்னேற்றத்திற்குத்

Scanned with CamScanner

தடையாய் இருக்கிறது என்று கருதி அந்த அறிஞர்களை அதற்குப் பாடுபடச் செய்தல் வேண்டும்.

இப்படிப்பட்ட ஓர் அமைப்பை உருவாக்கி விட்டால் இவர்களைப் போராட்டத்திலே ஈடுபடுத்திக்கொண்டிருக்கத் தேவையில்லை. முழு நேரமும் மக்களுக்காகவே பாடுபடலாம்.

அடுத்தது எங்களைப் பொறுத்தவரைக்கும் ஓர் இயக்கத்தை அமைத்திருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியும். அந்த இயக்கமும்கூட எதிர்காலத்திலே நம்முடைய திராவிடர் கழக இயக்கத்தோடு பொது முயற்சிகளிலே—மக்கள் இனநல முயற்சிகளிலே—முழுக்க முழுக்க ஒத்துழைப்புத் தரும்படியாக இருக்கும், எதற்காக இதை நான் வெளிப்படையாகச் சொல்கிறேன் என்று சொன்னால் திராவிடர் கழகக் கொள்கைகளிலே சிலருக்கு ஒரு சில கொள்கையிலே பிடித்தமில்லாமல் இருப்பதாக எனக்குத் தெரிகிறது. அதுபோல் கொஞ்சம் ஈடுபாடு காட்டாத குழுவை ஈடுபடும்படி செய்யலாம். இனநல உணர்ச்சியிலே அவர்கள் வேறெங்கும் ஈடுபட்டுவிடாதபடி ஏற்படுத்திவிடலாம். மக்கள் திராவிடர் இயக்கம் பிடிக்கவில்லையானால், உடனே பார்ப்பன இயக்கங்களில் போய்ச் சேர்ந்து கொள்கிறார்கள். அ. தி. மு. க. விலேயிருந்துகூட போய்ச் சேர்ந்திருக்கிறார்கள். நீங்கள் அண்மையிலே பல பெரிய பேச்சாளர்களெல்லாம் பார்ப்பன இயக்கச் சார்பிலே சேர்ந்து இருக்கிறார்கள் என்பதைப் பார்த்திருப்பீர்கள். அப்படிப் போகிறவர்களை யெல்லாம் தடுத்து நிறுத்தி, இப்படி ஒரு குழுவை ஏற்படுத்திவிடலாம் என்பதற்காகத்தான், இந்த இயக்கத்தை நாங்கள் விரிவாகத் தொடங்கினோம். எதிர்காலத்திலே இனநல உணர்வோடு ஆட்சிகள் தொடர்பான-கல்வித் தொடர்பான-இளைஞர்கள் முன்னேற்றம் தொடர்பான-முயற்சிகள் போக உண்மையான கருத்தினையும் நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இப்படியே இருந்து கொண்டிருப்பதிலே பயனில்லை! இப்படியே நம் முயற்சிகள் இருந்து விட்டுப் போய்விடக்கூடாது. இறுதியாக வெளிப்படையாக நாம் அரசு என்கின்ற நிலையோடும், நடுவணரசு என்கின்ற ஓர் ஆளுமையோடும் ஒருவகையான போராட்டத்தைத் தொடங்கியே ஆகவேண்டும். அந்தப் போராட்டம் இனநலம் அரசியல் நலம் கருதியதாகவும் இருக்கவேண்டும். அண்மையிலே திராவிடர் கழகம் நடத்தப்போவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்ற கோயில் கருவறை நுழைவுப் போராட்டம் தந்தை பெரியார் காலத்திலேயிருந்து நடந்து வருகிற போராட்டம். அதற்குப் பல தடைகள் ஏற்பட்டுவிட்டன, இப்போதும் திட்டமிட்டு இருக்கிறார்கள். எப்படியிருந்தாலும் பார்ப்பனர்கள் அதிகார பீடத்திலே இருக்கும் வரைக்கும் நம்மை முன்னேறவிட மாட்டார்கள்.

எனவே அவர்களை எதிர்த்துப் போராடியே ஆகவேண்டும். இப்போது நாம் நடத்தவிருக்கும் அந்தக் கருவறைப் போராட்டம் தடை செய்யப்பட்டால் வெளிப்படையாகவே எல்லோருமே இனநலம் கருதுகிற கட்சித் தலைவர்கள் தொண்டர்கள் எல்லோ

Scanned with CamScanner

ருமே இணைந்து ஒரு பெரிய போராட்டத்தை தொடங்க வேண்டும்.

முடிவாக நாம் ஒன்றை வரையறை செய்து கொள்ளவேண்டும். நம்முடைய பொதுச் செயலாளர் அவர்கள் காலத்துக்குப் பின்னல்-நம் தந்தை பெரியார் காலத்துக்கு பின்னல் ஏற்பட்ட அச்சம்-இவர்களுடைய காலத்துக்குப் பின்னலே எப்படி இருக்குமோ என்கிற அச்சமும் உண்மையாகவே என்னுள்ளத்தில் இருக்கிறது. ஐயா, நம்முடைய பேராசிரியர் இராமநாதன் அவர்களுடைய காலத்திலே, வீரமணி அவர்களின் காலத்திலே, நம் காலத்திலே—இனி எதிர்காலத்திலே இளைஞர்கள் எப்படி இருப்பார்கள் என்று சொல்லமுடியாது. எனவே நாங்களெல்லாம் இல்லாமல் போவதற்கு முன் நம் இனத்திற்கு ஒரு விடிவு ஏற்படும்படி நம் தலைவர்களெல்லாம் ஒன்றுகச் சிந்தித்துச் சரியான ஆக்க வழியிலே ஒரு நல்ல திட்டத்தை ஏற்படுத்தவேண்டும். அப்படி ஒரு 'நல்ல நாள்' வரும் என்று நம்புகிறேன்.

அதற்கு நம்முடைய பொதுச் செயலாளரை வெகுவாகக் கேட்டுக்கொள்வது கலைஞர்-பேராசிரியர் வேறு உண்மையான தமிழ் இனக் காவலர்களாக உள்ள அனைவரையும் கலந்து பேசி விரைவிலே ஒரு முடிவைச் செய்விக்கவேண்டும். இதுதான் என்னுடைய உள்ளக் கிடக்கை. தந்தை பெரியார் காலத்திலே தொடங்கி, பாரதிதாசன் போன்றவர்களின் காலத்தில் எல்லாம் முற்றுப்பெருமல், நம்முடைய காலத்திலும் எச்சப்பட்டுப் போகுமானல், அடுத்த நூற்றுண்டுத் தொடக்கத்திலே எப்படி இருக்கும் என்று சொல்லமுடியாது. எனவே ஒரு முடிவு நோக்கிய ஒரு திட்டமாக விரைவிலே ஒரு திட்டத்தை அமைத்தாகவேண்டும். அதற்கு நானும் என்னைச் சேர்ந்த தனித்தமிழ் இயக்கத் தொண்டர்களும், உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொண்டர்களும், உறுப்பினர்களும் எவ்வகையிலும் ஒத்துழைப்பையும் தர அணியமாக உள்ளோம் என்பதை இதன் வழியாக நம்முடைய பொதுச் செயலாளர் அவர்களுக்கும் பல ஆக்கமுறையிலே செயல்படும் பேராசிரியர்களுக்கும், அறிஞர்களுக்கும் சொல்லிக் கொள்கிறேன். மிக அண்மையான காலத்திலே அந்த வழியை அமைத்தே ஆகவேண்டும். இந்த வகையிலே என்னுடைய கருத்துகளைச் சுருக்கமாகச் சொல்லிவிட்டேன் என்றே கருதுகிறேன்.

நேருரை கண்டவர் :

மிக்க நன்றி; உடல்நலக் குறைவிலும்கூட உண்மையாகவும் உணர்ச்சியோடும் மிக எழுச்சியான கருத்துகளைச் செறிவாகச் சொல்லியிருக்கிறீர்கள்! மிக்க நன்றி! தங்களின் கருத்துகள் தமிழர் குமுகாயத்திற்கும் இளைஞர்களுக்கும் மிகுந்த பயனை அளிக்கும். தங்களுக்கு எங்களுடைய நன்றியையும் வணக்கத்தையும் மீண்டும் கூறி விடைபெறுகிறேன்; வணக்கம்.

பாவலரேறு; நன்றி வணக்கம்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

Scanned with CamScanner

ஓர் உணர்வுள்ளத்தின் கதறல்!

நிறுத்தாதீர் தென்மொழியை! நேர்ந்துவிடும் பெரும்பழியே!!

-பாவலர்-தமிழ்க்கனல்-

அன்புசான்ற பாவலரேறு ஐயாவிற்கு: நல்வணக்கம்; தென்மொழி சுவடி 24 ஓலை 5, கண்டேன். வழக்கம்போல, அறிவு நலஞ்சான்ற செய்திகளும்—உணர்வு நலஞ்சான்ற பாடல்களு மாக, அறிவு விருந்து செய்து நல்லமுது செய்தது. ஈடும் இணையு மற்ற, தங்களின் வைரவரிப் பாடல்களும், தமிழரசன் தன் தம்பி களுக்குத் தங்கள் தூவல்முனை சொல்லிவரும் கருத்துகளும் உணர்வு கொளுத்தின!

தங்களால், தங்களது எழுத்தால், பாட்டால், வீறுரையால்-விளக்கம் பெற்றுத் தெளிவுசான்ற நிலையில் உள்ள எங்களைப் போன்றோருக்கும்.—தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணு

(முன் பக்கத் தொடர்ச்சி)

இந்த நேருரையின் போது நம் பக்கத்திலேயே இருந்த பெரியார் பேருரையாளர் பேராசிரியர் ந. இராமநாதன் அவர் களிடம் இந்த நேருரைப் பற்றிக் கருத்துக் கேட்கப்பட்டது, அதற்குப பேராசிரியர் ந. இராமநாதன் அவர்கள் அளித்த விளக்கம்:

நமது மதிப்பிற்குரிய பாவலரேறு அவர்கள் நல்ல ஆழ்ந்த விளக்கத்தை எடுத்துச் சொன்னுர்கள்: நான் கேட்டு உள்ளம் மகிழ்ந்தேன். இந்நிலையில் அவர்கள் நேருரையைப் பற்றி நான் என்ன சொல்வது என்ற தடுமாற்றங்கூட ஏற்படுகிறது:

நம் பாவலரேறு அவர்கள் தந்தை பெரியாரவர்களுடைய கருத்துகளைப் பற்றியும் பெரியாரவர்களைத் தொடர்ந்து நமது மதிப்பு மிக்க பொதுச் செயலாளர் அவர்கள் தொடர்ந்து செய-லாற்றிக் கொண்டு வருகின்ற செயல் திறன்கள் பற்றியும் மனம் விட்டுச்சொன்ன கருத்துகள் என்னுடைய உள்ளத்தில் மிக ஆழ மாகப் பதிந்துவிட்டன.

இவ்வாறு பாவலரேறு அவர்களும் பொதுச் செயலாளர் அவர்களும் இணைந்து மற்ற-தமிழகத்தில் வாழ்கின்ற அறிஞர்கள்-மற்ற தொண்டர்கள் எல்லாருமாகச் சேர்ந்து ஒரு பெரிய வலுவு-மிக்க அணியை ஏற்படுத்தி இந்த நாட்டை மிக நல்ல நிலைக்குக் கொண்டு வந்துவிடுவார்கள் என்பதிலே இன்று உறுதியான எண்ணம் எனக்கு ஏற்பட்டது: அந்த எண்ணத்தைத்தான் உங்களுக்கு நான் இப்போது விடையாகச் சொல்லிக் கொள் கிறேன்.

[''இந்த நேருரை சென்னை-5, 18 முகமது அப்துல்லா தெரு வில் உள்ள பாவலரேறு இல்லத்தில் 27-4-82 அன்று நடை பெற்றது.'']

Scanned with CamScanner

போன்றோரால், திராவிட உணர்வு கொளுத்தப் பெற்றவருள் ஒரு பகுதியினர்க்கும், ''தமிழக விடுதலை கிட்டுமா?!'' என்ற வினவும், ''அது தந்தை பெரியாராலும், பிறராலும் தூக்கிப் பிடிக்கப் பெற்றுப் பின்னர் 'பொத்தென' கீழே போடப்பெற்ற கொள்கையாயிற்றே; நடக்குமா!''—என்பன போன்ற ஐயப் பாடுகளும் நிரம்பவே உள்ளன.

திராவிட உணர்வு கொளுத்தப் பெற்றவருள், ஒரு பகுதி யினர் எனக் குறிப்பிட்டமைக்குக் காரணம்-அவருள்ளும் ஒரு பகுதியினர்தாம 'விடுதலை' பற்றிய செய்தியையே சரிவர அறிந்து வைத்துள்ளார்கள் என்பதால்தான்!

'விடுதலை' வேட்கையுடைய தமிழ் மண்ணின்-மைந்தர்களின் பாதிக்கு மேலோருள்ளும், பிறருள்ளும் ''இதனை எவ்வாறு பெறு வது?'' என்பதிலும், ''பெறக்கூடிய சூழல் அமையுமா?'', என் பதிலும்-அதற்காக, ''மிகப் பெரிய போர்க்களத்தைக் கண்டாக வேண்டுமே, நிறைய களப்பலிகளைத் தந்தாக வேண்டுமே!''-என்பன போன்ற சிந்தனைத்தாக்கங்கள் அலைமோதி ஆழ்த்துகிற நிலை!

இவ்வளவு எண்ணங்களுக்கும், நினைவு மயக்கங்களுக்கும் காரணம் உள்ளது. வடவரின் வல்லாட்சி இறுக்கமும், அவர்தம் ஆட்சியதிகாரச்-சூழ்ச்சியும்-நம்மீது, நம் தோள்கள் மீது, நம் பிடரியின்மீது, தெரிந்தோ, தெரியாமலோ, உடன்பட்டோ, படாமலோ, மிகவும் அழுத்தமாகத் திணிக்கப்பட்டுத் தொடர்ந்து-வழிவழியாக-நமது குலக்கொடிகள் எல்லாரும்-'சனநாயகம்' என்ற புனுகுப்பூச்சால் அதனை ஏற்றிடவேண்டிய கட்டாயச் சூழலில் வாழ்ந்து வரும் அவலநிலை!

மறுபுறம், நந்தமிழகத்தின், கலை, பண்பாடு, மொழி முதலிய வற்றைத் திட்டமிட்டுக் கெடுப்பதற்கும், அழிப்பதற்குமாகவே,-''பொய்புனைசேர்த்தல், இட்டுக்கட்டுதல்,சிதைத்தல், மாற்றல்''-போன்ற-இன்னோரன்ன திருவிளையாடல் திருட்டுவேலைகளை, நம்மோடேயே கலந்திருக்கும், கேடுகெட்ட ஆரியப் பார்ப்பனன் களையும், அவர்தம் அடிவருடிகளையும் கொண்டு, தொடர்ந்து செய்யப்பெற்று வரும் அவலநிலை!

—இவ்வாறான நிலைகளில்-நம் தமிழக மக்களிடையே-தமிழர் களிடையே-கட்டாயம் இருக்கவேண்டிய தூயமொழியுணர்வும், இனவுணர்வும், மானவுணர்வும், விடுதலையுணர்வும் கிஞ்சிற்று மில்லாமலும்-இருக்கின்ற உணர்வுகளையும் கொஞ்சம் கொஞ்ச மாக இழந்தும்—அடிமை இந்தியனாகவும், இந்தியக் குடும்பமாக வும், மாறியும், மாற்றியும் வருகிற சூழ்நிலை, மிகவும் எண்ணிப் பார்க்கத்தக்கது!

இம்மண்ணில், இனவுணர்வை ஏற்றி வைக்க வந்த தந்தை பெரியாரும்,-அறிஞர் அண்ணாவும், அதனை இறுதிவரை சரியாகத் தூக்கிப்பிடிக்காது போனநிலையில், அவர்கட்குப் பின்னே—இன்று வாழ்ந்துவரும் ஒரே பெரும் பேராசானும்—படைப்பிலக்கியப்

Scanned with CamScanner

பாவலனும், அமுதத் தமிழ் நாயகனுமான தாங்கள் விடாது மூட்டி வந்த-வருகிற உணர்வுத் தீ, பெரிதும் பரவி, விரிந்து சிறந்துள்ளது!

அப்பணிக்காகத் தங்களது சிந்தனையில் முகிழ்த்துத் திருக் கைகளால் எழுதிக் குவிக்கப் பெற்றுள்ள பாடல்களையும், உரை வீச்சுகளையும், இத்தமிழ் மண் என்றென்றும், திரும்பத் திரும்பப் படித்து, உள்ளத்தில் உரமேற்றிக் கொண்டே இருக்கப்போகிறது என்பது உண்மையிலும் உண்மை. தங்களின் ஒவ்வொரு வரியும், எதிர்காலத் தமிழனுக்குக் காப்பு செய்யும் அறவீச்சாகும்! அறிவு வீச்சாகும்!!

இற்றைநாளில், வரலாற்றை மீளப்பார்ப்பதுவும், ''இந்திய விடுதலை எவ்வாறு பெறப் பெற்றது'', என எண்ணிப் பார்ப்பது வும், 'இந்தியா' எனும் நாடு எங்ஙனம் உருவாக்கப் பெற்றது; 'அங்ஙனம் உருவாக்கியவர்கள், வடவாளுமை வல்லாண்மை ஏற்படும்படியாக, எங்ஙனம் ஆட்சியமைப்பு, அரசியல் சட்டத் தைச் செய்து கொண்டார்கள்', 'இந்தியன், இந்தியன்' என ஓலமிட்டுக் கொண்டும்,-எவ்வாறு வடவாளுமை வல்லதிகாரம், மேலும் மேலும் இறுக்கமாக்கப்படுகிறது;—மொழி வழியாக, நந்தம் செந்தமிழ்மொழியை, எவ்வாறு சிதைக்கவும், அழிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப் பெறுகின்றன;—அவைவழி, 'தமிழ்-தமிழன்', என்ற இனநலவுணர்வுகள் அழிக்கப்பட்டு, இத்தமிழ-கத்தை ஒருவாரிய அடிமைப் பகுதியாக மாற்ற எவ்வெவ்வா-றான முயற்சிகள் மேற்கொள்ளப் பெறுகின்றன;-அவற்றிற்கு, இங்குள்ள ஆரியப் பார்ப்பனர்களும், வீடணத் தமிழர்களும் எவ்வாறு துணைபோகின்றனர்;—என்பவை எல்லாம் நம் செந்-தமிழ் இளைஞர்க்குக் கட்டாயம் விளக்கம் பெறச் சொல்லப்பட்-டாக வேண்டும்!

இந்தப் பணியைத் 'தென்மொழி' ஒன்றுதான்-ஐயா பாவலரேறு மட்டும்தாம், செம்மாந்த நிலையில்-எந்த ஆற்றலுக்-கும் தலைவணங்காது,-தம் தூவல்முனையையும் வளையவிடாது,-தொடர்ந்து செய்து வருகின்றார்கள்! மெய்யானவற்றையே... எழுதிக்குவித்தும் வைத்துள்ளார்கள்! இ'து ஐயா அவர்களின் செயல் மட்டுமன்று; இறையும், இயற்கையும் ஐயா அவர்களின் உள், உயிர் உணர்வுகளில் நீக்கமற நிறைந்திருந்து ஆட்டுவிக்கும் திருவிளையாடல்களேயாகும்! இதனை காலம் மெய்ப்பிக்கும்!!

இவ்வாறு ஐயா அவர்களால் எழுதிக் குவிக்கப்பெற்றுள்ள, அறிவு முத்துகளின் குவியல்களுக்குள்ளே,-மூழ்கி மூழ்கி நித்தம் திளைத்துக் கொண்டிருக்கும், அறிவுலகச் சிற்பிகளும்-அவற்றை இவ்-வுலகுக்கு ஓங்கிச் சொல்லவேண்டும் என்ற வேட்கையுடனும் வாழ்ந்து வருவோர் பலராவர்!

ஏசுகிறித்துவின் கொள்கைகளை ஏந்திக் கொண்டு, உயிர் வாழ்ந்து, உயிரையும்விட்ட பன்னிருவர் போன்றோர்—தென்மொழிப் பட்டாளத்தில் நிரம்பவுண்டு!!

மெல்ல, மெல்ல, ஆனால் உறுதியாக, ஐயாவின் கருத்துகள்-தொடர்ந்து தூவப்பெற்று வந்தாலேயே—தமிழக விடுதலை உறுதியாய்க்கிட்டும் என்பதில் ஐயமில்லை!!!

களங்கண்டுதான் விடுதலை பெற்றாகவேண்டும் என்பதில்லை; அமைதியான வழியிலேயே-தமிழ்மாந்தர் அனைவரும், ''விடுதலை ஒன்றே நிலையான தீர்வு'';-எனும் கருத்தினைக் கொள்ளத்தக்க கருத்துமாற்றம் ஏற்படுத்தப் பெற்றாலே போதும்; வெள்ளையர் வல்லதிகாரத் தன்னாளுமையை விலக்கிக் கொண்டு சென்றது போல, இந்த வடவாளுமை வல்லதிகாரமும் நமக்கு விடுதலையை வழங்கிவிட்டு, ஒதுங்கிக்கொள்ளும் வரலாற்றுக் கட்டாயமே ஏற்படலாம்; இது நடைபெறக் கூடியதே!

வேண்டுவனவெல்லாம், 'இயலுமா, இயலாதா'—என்ற பேச்சோ, ஆய்வோ இல்லை. தொடர்ந்து ஐயா பாவலரேறின் கொள்கைகளைத் தூக்கிப் பிடிப்பதுவும், நந்தம் செந்தமிழ் மக்களுக்கு, உண்மைகளை, உண்மைக் கருத்துகளை ஒளிர வைப்பதுவுந்தான்!

இஃது இவ்வாறிருக்க,

வெறும் வாய்வீரம் பேசுவதும், துயரில் பின் வாங்குவதுமே, வாழ்வாய்க் கொண்டிலங்கும் நம் செந்தமிழ்நாட்டு மக்களிடை—உறங்கிக்கிடக்கின்ற உணர்வில்லாத் தமிழரிடை, கடந்த இருபத்தொன்பது ஆண்டுக்கால உழைப்பு, என்ன மாற்றத்தை விளைத்துள்ளது?!—என ஆய்ந்தால்—பெருந்துயர் நெஞ்சைப் பிளக்கிறது!

சுவடி 24; ஓலை 6, ''தென்மொழி—ஒரு சிந்தனை!'', ஆசிரியவுரை கண்டு உள்ளங் கலங்கினேன்! நான், அவ்வப்போது, நம் அறிவு நலஞ்சான்ற நண்பர்களிடையே உரையாடுங்கால் சொல்வதுண்டு; ''ஐயா பாவலரேறின், பாடல்களையும், கருத்துகளையும், உரை வீச்சுக்களையும், இன்றைக்கு எப்படி—இந்த தமிழ்க் குமுகாயம்—பாவேந்தனின் பாடல்வரிகளில் ஒன்றிரண்டை மட்டும், மேடையிலே சொல்லிவிட்டு, அத்தோடு தன் கடன் கழிந்ததாய்க் கருதிக்கொண்டு, வயிறு நிரப்பப் போய்விடுகிறதோ அதேபோலத்தான், எதிர்வரும் குமுகாயமும், பாவலரேறின் பாடல்களையும் மேடையில் பாடிக்காட்டப் போகிறதேயில்லாமல், வேறு ஒன்றும் செய்துவிடப் போவதில்லை.'' என்பதாகக் குறிப்பிடுவதுண்டு!

அதனைத் தங்கள் ஆசிரியவுரைச் சிந்தனை நன்கு மெய்ப்பித்தது. இந்நிலையில்—தென்மொழியும், அதன் ஆசிரியர் பாவலரேறு அவர்களும், இதுவரை நடைபோட்டு வந்த அரசப் பாதையில் இருந்து, சற்று விலகி, வேறான முறையில்—இனி வருங்காலங்களில், நடையிடுவார்களேயானால், ஒரு சரியான, கருத்துமாற்றம் மிக்க குமுகாயமாக இத்தமிழ்க் குமுகாயத்தை உருவாக்கமுடியும் எனக் கருதுகிறேன்.

தங்களின் மொழி, இனநலங்காக்கும் கருத்துகளிலும், அதன் வழியிலான பணிகளிலுமாக—மொழித்தூய்மை, மாற்றுமொழி வல்லாண்மை தடுக்கப்பெறுதல், மொழி அழிந்தால் இனம் அழியு மென்ற வரலாற்று உண்மையை மக்கள் மனத்தில் ஆழப்ப தித்தல்,-இவ்வாறான மொழிநலம் பற்றியமைக்காக நாம் செய்ய வேண்டியவையும், இனநல மீட்பிற்காகத் தமிழ்நாட்டைத் தனி நாடாய் மீட்டெடுக்க வேண்டியதற்காக ஆற்றவேண்டிய பணிகளுமாக, இருவேறு நிலையான வகையில் பணிகள் உள்ளன.

இவ்வாறான நிலையில், தங்களின் பேருழைப்பும், கூரிய அறிவு நலமும், நாட்டு விடுதலையையே, முன்னதாகத் தூக்கிப்பிடிப்ப தால்—தங்களது ஆற்றலுக்கும், அறிவு உழைப்பிற்கும் ஏற்ற வகையான அளவில், இம்மண்ணில் விளைந்திருக்கவேண்டிய, உணர்வு விளைவினை, விளைக்க இயலாது போய்விட்டது என்றும், அறிந்து கொள்ளவேண்டிய அளவிற்கு, இத்தமிழகம் ஐயா பாவலரேறு அவர்களை அறிந்து கொள்ளாது போய்விட்டது என்றும் கருதுகிறேன்!

'மொழியுணர்வு'—'இனமீட்பு', என்ற இவ்விரண்டு அரும் பணிகளில், முன்னதாகத் தேவையான, மொழியுணர்வே, கிஞ்சிற்றுமற்ற, இந்த ஆட்டுமந்தைத் தமிழர் கூட்டத்தை வைத்துக் கொண்டு, எவ்வாறு இனமீட்பை பெற்றுவிடமுடியு மென்று கருதுகின்றீர்கள்?!

ஆதலால்—

தங்களைத் தவிர, வேறு எவராலும் செய்யமுடியாத, அருந்-தமிழ்ப்பணிகளை, தங்கள் வாணாள் காலத்தில், நிரம்பச் செய்ய வேண்டியிருப்பதாலும்—மொழி, இனநல நாட்டுணர்வுகள், இன்னும் இத்தமிழர்க்கு நிரம்ப ஊட்டப்பட வேண்டியிருப்ப-தாலும்—''எங்கோ ஒரு மூலையில் நின்று கொண்டு, கண்ணுக்குத் தெரிகிற நிலப்பரப்பில் தூவப்பெறுகிற விதைகளால், விளைச்ச-லும் அவ்வளவாய் இருக்கப்போவதில்லை; விளைவும் அவ்வளவாய் காணப்போவதில்லை'' என்பதாலும்—மக்கள், நோக்கிற்கும் போக்கிற்கும் ஏற்ப, அவரோடு ஒப்பப்போய் உழவு நடத்திட வேண்டும் என்பதாலும்-மொழியுணர்வே, கிஞ்சிற்றும் அற்ற, நம் அடிமைத் தமிழின மக்களை வைத்து, உறுதியாய்த் தமிழக விடு-தலையைப் பெற இயலவே இயலாது என்பதாலும்-வணிகவாழ்வில் ஆழமூழ்கி, மூச்சுத் திணறிக் கொண்டு, எப்போதாவது தலையை வெளியே நீட்டிக் கண்ணுக்குத் தெரிகிற எவனுக்காவது தனது ஒப்போலையைப் போட்டுவிட்டு, மீளவும் ஆழப்புதையுண்டு போய்ப்-பொதுநலம், பிறர்நலம், குமுகாயநலம் என்ற எந்த வகைச் சிந்தனையோட்டமும் சிறிதுமின்றி, சூடு, சொரணையற்று வாழ்ந்துவரும், இந்த மானங்கெட்ட குமுகாயத்தை மான முடையதாக மாற்றிட முடியவேமுடியாது என்பதாலும்-சரியான, தாய்மொழி உணர்வுடைய குமுகாயமாக, இதை மாற்றிய-மைப்பதுவே, ஒரு பெரும்பணியாகவும், தலைமுறை தாண்டி

செய்யப்படவேண்டிய அரும்பணியாகவும், தலைமேலிருத்தலா-லும்-அவ்வாறான, சரியான, மொழியுணர்வு பெற்றவராய், அனைத்துத் தமிழர்களும் மாறும் போதுதான், விடுதலையுணர்வு பூத்தலும், அதன் வழி விடுதலை கிட்டலும் நடக்கும் என்ப-தாலும்-தற்போதைக்குத் தமிழக விடுதலையைத் தள்ளிப்போட்டு விட்டு, மொழிநல, இனநல உணர்வுக் கொள்கைகளும், சரியான புதிய ஓர் அரசியல் கோட்பாடும் இணைந்த, புதிய ஓர் இயக்க மாக உ.த.மு.க.வை மாற்றி எளிய மக்களும் பங்கேற்கிற வகை யில் அமைத்துத் தாங்கள் தலைமையேற்பீர்களேயானால்; மிக விரைவில் தமிழகம் தங்கள் பின்னே வரும் என்பதில் ஐயமில்லை!

அவ்வாறான புதிய கூட்டமைப்பில், இதுவரை பயிற்சி பெற்ற தென்மொழி வீரர்கள் அனைவரும், செயல்-வீரர்களாய் முன் நின்று உழைப்பார்களேயானால், நமது இயக்கம், வெகுவிரைவில் பொது மக்கள் முன்னிலையில் கொண்டு செல்லப்பெற்று, ஏற்கப் பெறும் சூழல் உருவாகும். நம்மோடு ஒத்த கருத்துடையவர் களுடன் இணைந்தும் வளர்ச்சி பெறலாம்!!

நேருக்கு நேர் இருக்கும் சூழலுக்கும், மக்கள் போக்கிற்கும் ஏற்ப, அவரோடே சென்றுதான், நமது அரிய கருத்துகளை, இம்மண்ணில் ஆழமாய் விதைத்தாக வேண்டும்!

இதுபோன்ற மாற்றத்திற்கு நம்மை நாம் அணியப்படுத்திக் கொள்கிற நேரத்தில்-நமது கருத்துக்கு ஒத்த நிலையில், உருவாக்-கப்பெற்ற திராவிட இயக்கங்களின் நிலை, அவர்தம் செயற்பாடு களைப் பற்றி எல்லாம், சற்று ஆழமாய், இங்கு அலசிப்பார்த்தல், நமது முடிவுக்குத் துணையாய் இருக்கும் என நினைக்கின்றேன்!

ஒரு நேரத்தில், இங்கு விடுதலையுணர்வை வளர்த்த, அதே திராவிட இயக்கத் தலைவர்கள், அ'து தேவையில்லை என அறிவித்துவிட்டதோடு, இந்திய நாட்டிற்கு ஏதம் வந்த காலத்-தில், மற்றவர்க்கு நாங்கள் சளைத்தவர்கள் அல்லர் எனும் அள-விற்கு, இந்திய நாட்டுப் பற்றினைத் தூக்கிப் பிடித்துக் காட்டி-னார்கள்!

மேலும், தி.மு.க. தலைவர் கருணாநிதி, இந்திரா காந்தியை அரசியலில் வீழ்த்துதற்காக, மொரார்சி தேசாயுடன் புதுஉறவு கண்டபோது, "அவ்வாறு பூத்த புதுஉறவும், பழைய உறவும் ஒன்றேதான்." எனப் பட்டறிவு முறையாக உணர்ந்து கொண்-டும்கூட, இன்னும், அந்த உரலுக்குள்ளேதான் தலையை விட்டு விட்டுப் பார்த்துக் கொண்டுள்ளார், தமிழினத் தலைவர்!

அவரிடம் பயிற்சிப் பெற்ற தி.மு.க. தம்பிகளோ, 'தமிழ் வாழ்க' என முழங்குவதையும், 'தமிழ்' மொழிபற்றிப் பேசுவதை யும், அவர்தம் தலைவர் முடுக்கிவிடும் போது மட்டும் வாயைத் திறந்து கூவுகிற தமிழ்ப் பொம்மைகளாக இருந்து வருபவர்கள் ஆவார்கள். அவர்தம் தமிழ்மொழியுணர்வுப் பேச்சுகள் எல்லாம், வெற்று ஆரவாரங்களே தவிர வேறொன்றுமில்லை;

மறுபுறமோ, தந்தை பெரியாரின் கொள்கைகளை, ஆழமாகப் பதித்து, மற்றுமொரு தென்மொழிப்பட்டாளமாக வளர்ந்து நிற்கவேண்டிய, திராவிடக் கழகத்தினரின் தலைமை, அவர்தம் போக்கு முன்னதிலும் வெட்கப்படக்கூடியதே!

ஐயா பெரியாரின் கொள்கைகளை உயர்த்திப்பிடித்தும்—அவர்தம் நினைவுகளைத் தமிழர்தம் நெஞ்சில் ஆழப்பதித்தும்—பெரியாருக்குப் பின் தோன்றிய பெரியாராய் நிற்கும் பாவலரேறைக்காத்தும்—தென்மொழியைத் தூக்கிப்பிடித்தும்—கூனல் தமிழனின் முதுகு நிமிர்த்திட வேண்டிய பெரும்பணியைச் செய்ய வேண்டிய வீரமணியோ, தாம் எப்படி, ஐயா பெரியாரிடம் ஏதிலியாய் இணைந்தாரோ, அந்த அறிவைச் சரியாய்க் காட்டிக் கொண்டு, உலக உலா வருவதும், அவருக்கத்தக்க அரசியல் வேட்கையில் ஆட்பட்டுப் பொறிமையும் அழுக்காறுமிக்க உள்ளத்துடன், சேர்த்துள்ள காசுகளை எண்ணிப் பார்த்துக் கொண்டும், நிறைந்துள்ள சொத்துகளைக் கணக்குப் பார்த்துக் கொண்டும், செருக்குமிக்க செட்டியாராக வாழ்ந்து கொண்டிருக்கிறார்!!

மொத்தத்தில் இவர்களால், 'தமிழ்', 'தமிழன்', 'பார்ப்பன எதிர்ப்பு', 'இனநலம்' பற்றிய செய்திகள் யாவும், ஆரியச் சடங்கில் 'ஐயன்' சொல்லும் மந்திரச் சொற்கள் போலத் தமிழர்களை ஏமாற்றப் பயன்படுகின்றனவேயல்லாமல், இவை பற்றிய உண்மைகளை உணர்த்துதற்கும், நந்தமிழ் மக்களின் செந்தமிழ் உணர்வுகளைக் கொளுத்துதற்கும் பயன்படுத்தப் பெறவில்லை—என்பதே உண்மையாகும்.

இஃது இவ்வாறிருக்க-ஒரு புறம், தில்லிக்கு முந்தானை விரிப்பது ஒன்றையே, தம் வாழ்நாள் கோட்பாடாகக் கொண்டிலங்கும் ஆரியப் பார்ப்பனர்களும், அவருடன் இணைந்து நிற்கும் வீடணத்தமிழர்களும்... மறுபுறம், தமது சொந்த வாழ்க்கை நலம் ஒன்றையே குறிக்கோளாய்க் கொண்ட புல்லுருவித் தமிழர் கூட்டம்... பிறிதொரு பக்கம், கல்வியறிவு அறவே அற்ற நிலையில், இந்த மானங்கெட்ட அரசுகளின் 'கல்விப் புரட்சியை!'ப் பறைசாற்றிக் கொண்டிருக்கும், ஏழைத்தனமான எண்ணம் உடைய, ஏதிலிகளைப் போன்ற நைந்த, நலிந்த தமிழர் கூட்டம்...

இத்தகைய சூழலில், 'தென்மொழி' வழி, ஐயா பாவலரேறு அவர்கள், கடந்த கால் நூற்றாண்டுகட்கும் மேலாக ஊட்டி வரும், பல்துறை அறிவு நலஞ்சான்ற செந்தமிழ் ஆய்வுரைகளும், புரட்சிப்பாக்களும், உரை-வீச்சுகளும், ஒரு சிறிய குழுவை, உணர்வுநலமும், அறிவுநலமும் மிக்கவர்களாய் மாற்றியுள்ளது என்பதும், அத்தகைய 'தென்மொழி' மறவர் தம்முள்ளும், எதற்கும் அணியம், என்ற முனைப்புடனும், ஒத்த உணர்வுடனும் தங்கள் பின்னே, எந்தச் சூழலிலும் அஞ்சாது நிற்கக்கூடிய, தீரமும்-வீரமுமிக்க, கொள்கை உரவோர்கள் மிகச் சிலரே என்பதும், எண்ணிப் பார்க்கப்பட வேண்டியவையாகும்!

Scanned with CamScanner

இவ்வாறுன, மேற்கண்ட அனைத்து நிலைகளையும் நீள நினைத்து, ஆழமாய் எண்ணிடும் போது, நாம் இன்னும் முனைந்து' செய்து முடிக்கவேண்டிய உடனடிப் பணிகளாகக் கீழ்க்காண்பவை கண்முன் வருகின்றன!

தந்தை பெரியாரின் வலிந்த பிராமண எதிர்ப்பு, சாதீய எதிர்ப்பு முதலியவற்றுலும், தென்மொழியின் அரும்பணியாலும்- நம்மை ஒத்தோரின் எழுச்சியிஞலும், பார்ப்பனர்கள் கூடத் தம்மை சிலபல நிலைகளில் மாற்றிக் கொண்டனர். இன்னும் நம்-தமிழகக் கம்(கிரா)மங்களில், உயர்சாதிக்காரர்களாய்த் தம்மை பாவித்துக் கொள்ளும் தமிழரிடை, தாழ்த்தப்பட்ட நமது அன்புத் தமிழர்கள் படும்பாட்டை எண்ணுகையில், நெஞ்சு புண்ணுகிறது! இந்நிலை மாற நம் குரல் ஓங்கி ஒலித்தாக வேண்டும்!!

நம்மவர்களிடையே, இன்னுஞ் சரிவர ஏற்படாத தமிழ் மொழிப்பற்றை ஊட்ட, 'நமது பணியை இன்னும் தீவிரப்படுத்தி ஏழை உழவனும், தொழிலாளியும்கூட தமிழ் உணர்வு பெறப் பாடுபடவேண்டும்.!

உலகுபுகழ் சிறப்புடைய, தமிழர்தம் மெய்ம்ம-இயல் கோட்பாட்டினைத் தூக்கிப்பிடித்துக் காட்டியும்—'இந்துமதம், இந்து மதம்', என எல்லாவற்றையும் ஒன்றுய்ப் போட்டுக் குழப்பி—அதில் தமிழர்தம் உயர் நெறிகளையெல்லாம்—அரிய இறைநெறி வயப்பட்ட மெய்ம்ம-இயல் கருத்துகளையெல்லாம்—தமதாக்கிக் கொண்ட ஆரிய சூழ்ச்சியை முறியடித்தும்—இனம்பிரித்துக் காட்டித், தமிழர் நெறியைத் தோண்டியெடுத்து, முறைப்படுத்தி-யும் பாதுகாத்தாக வேண்டும்!

தேமதுரத் தமிழிசையில், நமது திருமந்திரங்கள் எல்லாம், நந்தம் செந்தமிழ்த் திருக்கோயில்கள் எங்கும் ஓதப் பெறச் செய-லாற்ற வேண்டும்!

இழந்துவிட்ட 'தமிழிசையை'—இசைத் தமிழை, மீட்டெடுத்துத் தமிழ் மன்றில் எல்லாம் இசைக்கச் செய்து, புகுந்துள்ள பார்ப்பனத் தெலுங்கு வழிவந்த புன்மை இசையைப் புற-முதுகிட்டோடச் செய்யவேண்டும்!

ஏராளமான திருக்கோயில் சொத்துகளை எல்லாம் தின்று கொழுத்துத் திரிகிற ஆண்டிப் பண்டாரங்களின் தொடையைத் திருகி வேலை வாங்கவேண்டும்!

எல்லாவற்றுக்கும் மேலாக, வள்ளுவர்தம் மறைநூலைத் தமிழன் ஒவ்வொருவனும் திருமறையாய், உள்ளத்தே வைத்துப் போற்றும் சூழலை உருவாக்க வேண்டும்!

அழுகிக் கிடக்கிற இவ்வரசியல் அமைப்பிற்கு மாற்றுக, அறிவாண்மையும், குமுகச் சிந்தனையும் உடைய, நல்லவர்களடங்-கிய ஒரு மாற்றமைப்பைக் காணுது ஏங்கிக் கிடக்கிற தமிழர்

கட்கு, அவர் தம்மை வழி நடத்திச் செல்லத்தக்க, வலிவான நல்ல ஓர் அமைப்பாய், நம்மை நாம் கட்டியாதல் வேண்டும்!

இவ்வாறான புதிய கட்டமைப்பில்—தங்களின் தகைமையில், தலைமையில், வரும் தேர்தலில் ஈடுபட்டுப் பொதுமக்களும், புலமக்களும் நம்மை நன்கு அறியுமளவிற்கு நாம் வெளிப்பட்டாகல் வேண்டும்.

அப்போதுதான்—தாங்கள் எதிர்பார்க்கும் விளைவுகள், இம்மண்ணில் எப்போதாவது, இன்றில்லாவிட்டாலும் நாளையாவது உறுதியாய் விளையும்.! அங்ஙனம் விளையாது போனாலும் கூட, அவ்விளைவினை ஒத்த மாற்றங்களாவது, இம்மண்ணில், அரசியலில் — குமுகவியலில் — மொழியியலில் ஏற்படக்கூடும். அல்லாமல், இப்போதுள்ள நிலையையே தாங்கள் தொடர்வீர்களேயானால்,—தங்களது அறிவார்ந்தபணிகளை—அவற்றின் தன்மையை—தங்களது செம்மாந்த உழைப்பில்—அதன் அருமையைப் பிற பெருமையை—ஒரு சிறிதுகூட, இத்தமிழகம் புரிந்து கொள்ளவே புரிந்து கொள்ளாது என்று உறுதிப்பட உரைப்பேன்.!

மீண்டும் ஒருமுறை வேண்டுமானால், தென்மொழி நிறுத்தம் பற்றிச் சிந்திக்கும் சூழல் ஏற்படலாமே தவிர; வேறொன்றும் விளைந்துவிடப் போவதில்லை.!!

பாவேந்தர் மறைவிற்குப் பின்னால் பொருள்புரியாமலும், அவரையுமறியாமலும், அவரின் பாடல்வரிகளில் ஒன்றிரண்டு வரிகளை மட்டும் மேடையில் பேசிக் காட்டிக் கொண்டிருக்கும், இப்புன்மைத் தமிழர்கள்—பாவலரேறின் மறைவிற்குப் பின்னாலும், அதனையே தொடர்ந்து செய்து கொண்டும், 'ஆ...ஊ'... எனப் பேசித் திரிந்து கொண்டும் இருப்பார்களே தவிர, வேறு ஒன்றையும் செய்து கிழித்துவிட மாட்டார்கள்.!

பேரறிவுப் பெட்டகமே!—வாழும் பெரும்புலவரேறே!!—நறுந்தமிழ்க் காவலரே!—எதற்கும்மஞ்சாத நெஞ்சுரம் கொண்ட அரிமாவே!! — இருபத்தொன்பதாண்டுகளாய்க் கையிலெடுந்த தூவல்முனையை, எதற்கும், எவனுக்கும் சாயாமலும், ஆடாமலும் ஓடவிட்ட பெரும்பாவலர் பெருமகனே!!—தமிழ்த்தாயின் தவப்பயனே!!—என் ஆசைத் தங்கமே!, போதும், போதும், நீ பட்ட துன்பமெல்லாம் போதும்;

இந்த ஏதுங்கெட்ட தமிழினம், சுரணை பெற்று நிமிர்ந்து நிற்க, நீ எழுதிக் குவித்தவற்றில், இரண்டுவரிப் பாடலே போதுமே! இந்த அடிமைத் தமிழினம் மீண்டுவிடவா?! உன்னோடு சேர்ந்து வந்து போரிடவா?! நடக்காதைய்யா நடக்காது. ஒன்று வேண்டுமானால் நடக்கலாம்! மீண்டும் ஒருமுறை 'தமிழனுக்கு ஒப்பாரி' வைப்பது வேண்டுமானால் நடக்கலாம்!!

ஆதலால், பாவரசே!, இதுநாள்வரை நீ நடந்துவந்த பாதையில் சிறுமாற்றத்தைத் துணிந்து செய்!... வெளியே வா!...

மொய்ம்புத் தவம் கலைத்து முருக்குடன் வா!... அரிமாவென எழுந்து வா!...சீறும் சிறுத்தையென கழகத் தமிழ்க் கருத்துக்களை இம்மண்ணில் முழக்க வா!... புதிய போர்க்கோணம் (வியூகம்) அமைத்து வெற்றிகாணப் புறப்பட்டுவா!...

தமிழகத்திற்குப் புதிய ஒளி விளக்கேற்றிட, தென்மொழி இயக்கத்தைப் புதியதோர் அரசியல் இயக்கமாக்கிக் காலத்தை மாற்றிடத், 'தென்மொழி' மறவர் கூட்டத்தைக் கூட்ட வா! கூட்டி வா!!

தென்மொழியை நிறுத்தாதீர்! நேர்ந்துவிடும் பெரும்பழியே!! தென்மொழியைக் கேடயமாக்கி, முன் நிறுத்திப் பகைமுடிக்கப் புறப்பட்டு வா!... வா!... வா!... வா!... வெற்றி உறுதி!—நாம் வெல்வதும் உறுதி!!

அரியபேசி, உறங்குவதை விட...!

தமிழ்ப்புனலை—
தமிழ்க்கனலை—தமிழர்
போற்றும் புயல்பண்பை
தமிழரெல்லாம்
மீண்டுமெய்தி,
உலகினிலே மக்களோடு
ஒன்றிணைந்து முன்னேற
உறுதி கொள்வோம் தோழர்களே!

சாதிமத வேர்வெட்டிச்
சமவுரிமை எய்தற்கு
முதல் முழக்கம் தமிழ்முழக்கம் செய்திடுக!

மூண்ட பழங்கருத்தை
முடக்கிப் போட்டுப்
புத்தெழில் ஒளிவீச்சை
வாழ்வினிலே ஏற்றிக் சொள்க!

எழுத்தெல்லாம் தமிழின
எழுச்சியாக்கிக் கொள்க!

எண்ணமெல்லாம்
வீரத்தை விதைத்து வெல்க!

தமிழர்க் கின்னல்
தரும் தடைகள் நீக்காத் தமிழர்
உலகிலுள்ள மாந்தர்க்கு
ஒருபுரட்சி செய்வதுண்டோ?

குப்பை மேடேறிட முடியாதவர்
பனிமலை ஏறி வெல்வதுண்டோ?

அரிய பேசி உறங்குவதைவிட
எளிய பணி முடிக்கும் செயலே மேலாம்?

—பறம்பை அறிவன்.

பாரதியார் தமிழுணர்வு உண்மையா?

பெருமதிப்பிற்குரிய பாவலரேறு அவர்களுக்கு,

வணக்கம். பாரதியாருக்கு உண்மையான தமிழுணர்வு இருந்ததா எனத் தாங்கள் ஐயுறுவதாகச் (பெருஞ்சித்திரனார் நேருரைப் பகுதியில்) சொல்லியுள்ளீர்கள். மணிப்பவழ நடையில் உள்ள அவருடைய உரைநடை தமிழின் தனித்தன்மையைக் கெடுப்பது முற்றிலும் உண்மை. ஆயின், அவருடைய பாக்களில் பெரும்பாலும் செந்தமிழ்ச் சொற்களே இடம் பெற்றுள்ளன. ''சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே, அதைத் தொழுது படித்திடடி பாப்பா'' என்ற வரிகள் பாரதியாரின் உண்மையான தமிழ்நேயத்தை நமக்கு விளக்கவில்லையோ? யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'' ''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்வீர்'' என்ற வரிகளில் தமிழின் உயர்வையும், அஃது உலகளவில் ஆட்சி செலுத்தவேண்டும் என்ற அவரது பேரவாவையும், அவர் வெளிப்படுத்தியுள்ளாரே. மேன்மைக்கலைகள் அனைத்தும் தமிழில் வளரவேண்டும், தமிழர் நலமோடு வாழவேண்டுமெனில், 'தெருவெல்லாம் தமிழ்முழக்கம் செழிக்கவேண்டும்' என்று அவர் சொல்லிய வரிகளில், தமிழின் மேம்பாடு குறித்த அவரது அக்கறையை வெளிப்படுத்தியுள்ளாரே! சமசுக்கிருதத்தைவிட தமிழ் எவ்வகையிலும் குறைந்தது அன்று—என்ற கருத்தைத் தெரிவிக்கும் வகையில் ''ஆன்றமொழிகளினுள்ளே உயர் ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன்'' என்று தமிழ் சொல்வதாக தமிழ்த்தாய் வாழ்த்தில் பாடியுள்ளார்.

இம்மடல் எழுதப்படுவதின் நோக்கம், கீழ்க்காணும் சில கருத்துகளை வலியுறுத்துவதற்கே ஆகும். தமிழகப் பார்ப்பனர், தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர். பார்ப்பனர் அல்லாத தமிழரிடமிருந்து எவ்வகையிலும் அவர்கள் வேறுபட்டுக் (நிறத்திலோ (அ)உருவத்திலோ) காணப்படவில்லை. கிறித்துவம், இசுலாமியம் போன்ற சமயங்களைப் போலப் பார்ப்பனியமும் ஒரு சமயம். இப்பார்ப்பனியத்தைத் தழுவிக் கொண்ட தமிழர்களே, தமிழகப் பார்ப்பனர் ஆவர். இசுலாம், கிறித்துவ சமயங்களைத் தழுவியு தமிழர், பார்ப்பனியத்தை ஏற்றுக் கொண்ட தமிழர் அனைவருக்கும் தமிழே தாய்மொழி. தமிழகப் பார்ப்பனர் தமிழரே என்ற கருத்தைத் தனித்தமிழ் இயக்கத்தின் தந்தையான காலஞ்சென்ற மறைமலையடிகளாரே தம்முடைய ஆய்வுவழி வெளியிட்டுள்ளார். ''தலை எண்ணிக்கையில் அதிகம் உள்ளோர் தம்மைப் பேசுவோர்'' என்ற ஒரே ஒரு தகுதியைக் கொண்ட இந்திமொழியை, ஆட்சி மொழியாகத்திணிக்க இந்திய அரசு முயன்று கொண்டிருக்கும் இந்த நேரத்தில் தமிழரின் எண்ணிக்கையை குறைக்க நாம் ஏன் முயலவேண்டும்? தமிழரின் எண்ணிக்கை குறையின் தமிழ் நலன் எவ்வாறு பெருகும்? வந்தேறிய மொழிகளையெல்லாம் வளர்த்துக் கொண்டிருக்கும், தமிழரை ''தென்மொழி'' போன்ற தூயதமிழ் இதழ்கள், தமிழின்பால் திருப்ப முயலவேண்டுமே. தவிர, தமிழை வீட்டு மொழியாகக் கொண்டவரையும் தமிழரல்லர் என்று விலக்குவது கூடாது.

—கீதா உதயகுமார், ஐதராபாது.

புயலைக் கிளப்பிய சாத்தானின் கட்டளைகள்!

—முகிலன்—

சாலமன் ருசுட்டி எழுதிய 'சாத்தானின் கட்டளைகள்' (Satanic Verses) என்னும் நூல் உலகம் முழுவதும் பெரும் புயலைக் கிளப்பியுள்ளது. அச்சுப்பொறி கண்டுபிடிக்கப்பட்டபின், அச்சிடப் பெற்ற எந்த ஒரு நூலும், சாத்தானின் கட்டளைகளைப்போல், இப்படிப்பட்ட பரபரப்பை ஏற்படுத்தியதில்லை. எளிதில் அணைக்க முடியாத காட்டுத் தீயாக இந்நூல் பற்றிய திறனாய்வு கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கின்றது.

'சாத்தானின் கட்டளைகள்' நாற்பதுக்கு மேற்பட்ட முசுலீம் நாடுகளிலும், இந்தியாவிலும் தடை செய்யப்பட்டுள்ளது. முகமதியர் சிறுபான்மையினராக வாழும் நாடுகளில் இந்நூலைத் தடைசெய்யக் கோரி ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர். உலகம் முழுவதும் உள்ள முற்போக்குக் கருத்தினரும், குடிநாயக உணர்வினரும், ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள நாடுகளும் வரிந்து கட்டிக் கொண்டு இந்த நூலுக்கு ஆதரவாகப் பேசுகின்றனர்.

இந்நூலுக்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பம்பாயில் 12 பேரும், பாக்கித்தானில் 5 பேரும், காவலர்கள் துமுக்கியால் சுட்டதில் மாண்டனர்; பலர் காயமடைந்தனர். 'சாட்டனிக் வெர்ச்சு' 1988 செப்டம்பர் 20ஆம் நாள் இங்கிலாந்தில் வெளியிடப் பெற்றது. வெளியிடப் பெற்ற ஒரு மாதத்திற்குள் இந்நூல் இந்தியாவில் தடை செய்யப்பட்டது. இந்நூலுக்கு ஆதரவாகவும், எதிராகவும் திறனாய்வுகள் உலகம் முழுவதும் கிளம்பின. இதையெல்லாம் அறியாமல் கிணற்றுத் தவளையாக இருந்த ஈரானின் மதத்தலைவர் கொமேனி, பூனைக்கு மெய்யறிவு வந்ததுபோல், 14-2-89 அன்று சாலமன் ருசுட்டி மீது பாய்ந்தார். 'முசுலீம் மதக் கட்டளைகளை மீறினார்' என்று குற்றஞ்சாட்டி இறப்புத் தண்டனை கொடுத்தார். ஈரான் பாராளுமன்றம் கொமேனியின் இறப்புத் தண்டனைத் தீர்ப்பை ஆதரித்தது.

சாலமன் ருசுட்டியின் தலையைக் கொய்து வருபவருக்கு 9 கோடி உருபா பரிசு தருவதாகக் கொமேனி விலை வைத்தார். சாலமன் ருசுட்டியைக் கொல்ல ஈரானிலிருந்து உளவுப் படைகள் இங்கிலாந்து விரைந்தன. சாலமன் ருசுட்டியைக் கொல்லும் முயற்சியில் இறக்க நேரிடும் ஈரானியனுக்கு 20 கோடி ஈரானியப் பணமும், ஈகி(தியாகி)ப் பட்டமும் அளிக்கப்படும் என்று கொமேனி வெறியூட்டினார்.

கொமேனிக்குப் போட்டியாக, இங்கிலாந்தில் இராபர்ட் மேக்சுவெல் என்பவர் கொமேனியின் காட்டு விலங்காண்டிக் குணத்தை மாற்றி அவரை நாகரிகமுள்ள மாந்தராக மாற்றுபவர்க்கு 2.6 கோடி உருபா பரிசளிப்பதாக அறிவித்தார். இத்-

தகைய சூரூரைகளுக்கு இடையே சாலமன் ருசுட்டி இங்கிலாந்தின் இசுகாட்லாந்து காவலர் பாதுகாவலுடன் தலைமறைவானார்.

உலக வரலாற்றில் மதத்திற்கு எதிரான கருத்தைச் சொன்னவர்கள் கண்டிக்கப்பட்டதும், தண்டிக்கப்பட்டதும் நீண்ட வரலாறு கொண்டதாகும். கி.மு. 399-ஆம் ஆண்டு சாக்ரடீசு, கிரேக்கக் கடவுள்களை ஏற்க மறுத்தார் என்பதற்காகவும், 'எதையும் கண்மூடித்தனமாக நம்பாதே, உன் அறிவால் சிந்தித்துப்பார்' என்று கூறி இளைஞர்களைக் கெடுத்தார் என்று கூறியதற்காகவும், மக்கள் முன்னிலையில் நஞ்சைக் குடிக்கச் செய்து சாகடித்தனர்.

இந்தியாவிலோ, உலகில் வேறு எங்கும் இல்லாத தன்மையில் மதக்கட்டளைகளின் மீறல்களுக்காகத் தண்டிக்கப்பட்டனர். வேதங்களையும் சாத்திரங்களையும் கற்பதும் இவற்றை எடுத்து இயம்புவதும் பார்ப்பனர்களுக்கு மட்டுமே உள்ள உரிமையாக நெடுங்காலம் இருந்தது. இந்துமத வேதங்களைக் கற்க முயன்ற சூத்திரர்களின் நாக்குகள் அறுக்கப்பட்டன. செவிகளில் ஈயம் காய்ச்சி ஊற்றப்பட்டது.

'நாம் வாழும் உலகந்தான் கதிரவனைச் சுற்றுகிறது; பைபிளில் கூறப்பட்டிருப்பது போல், உலகத்தைக் கதிரவன் சுற்றவில்லை' என்று சொன்னதற்காகக் கலிலியோ சிறையில் அடைக்கப்பட்டார். நீண்டகாலச் சிறைக் கொடுமைகளைத் தம் முதுமை நிலையில் தாங்க முடியாமல், 'நான் சொன்னது தவறுதான்; கதிரவன்தான் உலகத்தைச் சுற்றுகிறது என்பதை ஒப்புக் கொள்கிறேன்' என்று கூறித் தம் உயிரைக் காப்பாற்றிக் கொண்டார்.

கிறித்துவ மதத்திற்கு எதிரானவை என்று உருசோ, வால்டேர், சோலா, டூமாசு, விக்டர் யூகோ போன்றவர்களின் நூல்கள் தடை செய்யப்பட்டன. வால்டேரும் விக்டர், யூகோவும் பிரான்சிலிருந்து நாடு கடத்தப்பட்டனர்.

இந்தியாவில் இந்து மதத்திற்கு எதிராக உள்ளன என்று காரணம் காட்டி, Mother India, Rama Retold, what Religion has done to Mankind, the Heart of India, Nine Hours to Rama, Lord of the Lingam ஆகிய நூல்கள் தடை செய்யப்பட்டன.

சி. என். அண்ணாத்துரை அவர்கள் எழுதிய 'ஆரிய மாயை', மதுரை எசு.டி. விவேகி எழுதிய 'வேதங்களின் வண்டவாளங்கள்' ஆகியவை முன்பு தமிழகத்தில் தடை செய்யப்பட்டிருந்தன. அண்மையில் மகாராட்டிர அரசு வெளியிட்ட அம்பேத்கார் அவர்களின் தொகுப்பில் உள்ள "இந்து மதத்தின் புரட்டல்கள்" என்ற நூலைத் தடை செய்யவேண்டும் என்று இந்து மத வெறியர்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

மதத்திற்கு எதிரானது, அந்த மதத்தினரின் மனங்களைப் புண்படுத்துகின்றது என்று குறை கூறியும், குற்றஞ்சாட்டப்பட்டும், பல நூல்கள், பல நாடுகளில் தடை செய்யப்பட்டிருக்-

கின்றன. இந்தச் சிக்கல்கள் அந்தந்த நாடுகளுடன் நின்று விட்டதே தவிர, சாத்தானின் கட்டளைகள் போன்று மற்ற நாடுகளில் எதிரொலிக்கவில்லை.

சாத்தானின் கட்டளைகள் உலகம் முழுவதும் எழுப்பியுள்ள புயலுக்கு முசுலீம் மத உணர்வுகள் புண்பட்டுவிட்டன என்று கூறப்படுவது மட்டுமா காரணம்? இல்லை. அந்தந்த நாடுகள் மேற்கொண்டுள்ள அரசியல் நிலைமைகளும், மற்ற நாடுகளுடன் அவை கொண்டுள்ள அரசு முறையிலான உறவுகளும் காரணங்களாக இருக்கின்றன.

அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் ஜார்ஜ்புஷ், சாலமன் ருசுட்டியைத் தீவிரமாக ஆதரிப்பது ஏன்? பதினோர் ஆண்டுகளுக்கு முன் ஈரானில் அமெரிக்காவின் கையாளாக ஆட்சியில் இருந்த மன்னர் ஷாவை மதப் புரட்சி மூலம் கொமேனி வீழ்த்தி விரட்டியடித்தார். இந்த அரசியல் பகை காரணமாகவே அமெரிக்க அரசு இன்று கொமேனிக்கு எதிராக முழங்குகின்றது. எனவே அமெரிக்காவை ஆதரிக்கும் நாடுகள் அனைத்தும் கொமேனி கொடுத்த இறப்புத் தண்டனையைக் கடுமையாகச் சாடுகின்றன.

''கொமேனி, சாலமன் ருசுட்டிக்குக் கொடுத்துள்ள இறப்புத் தண்டனையை விலக்கிக் கொள்ளவேண்டும்; இல்லாவிட்டால் ஈரான் நாட்டுடனான உறவை முறித்துக் கொள்வோம்'' என்று இங்கிலாந்தும், ஐரோப்பியப் பொருளியல் கூட்டமைப்பில் உள்ள 12 நாடுகளும் எச்சரித்தன. கொமேனி இதற்கு எதிர் வெல்விளி(சவால்) விட்டுப் பேசினார். எனவே இங்கிலாந்து, ஈரானுடனான உறவை முறித்துக் கொண்டது.

எப்பொழுதும் அமெரிக்காவின் நிலையுடன் முரண்பாடு கொள்வதுதான் உருசியாவின் கொள்கையாக இருந்து வருகின்றது. எனவே தன் நாட்டில், இறைமறுப்புக் கொள்கையை நெறிமுறையாகக் கொண்டுள்ள உருசியா கொமேனியின் மதவெறிப் போக்கை ஆதரிக்கின்றது.

முசுலீம் நாடாகத் தம்மை அறிவித்துக் கொண்டுள்ள எல்லா நாடுகளும் கொமேனியை ஆதரிக்கின்றனவா? இல்லை. அரபு நாடுகள் அனைத்தும் கொமேனி கொடுத்த இறப்புத் தண்டனையைக் கண்டிக்கின்றன. 'சாத்தானின் கட்டளைகள்' இசுலாம் மத உணர்வைப் புண்படுத்துகின்றது—என்று கூறுவதுடன் நின்று விடுகின்றன. இந்நாடுகளின் தெருக்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் கூட நடக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். சவூதி அரேபியாவும், ஈராக்கும் வெளிப்படையாகக் கொமேனியின் மதவெறிப் போக்கைக் கண்டிக்கின்றன; கிண்டல் செய்கின்றன.

வேறு எந்த முசுலீம் நாடும் கொமேனியின் இறப்புத் தண்டனைத் தீர்ப்பை ஆதரிக்கவில்லை. கொமேனி மட்டும் ஏன் இறப்புத் தண்டனையைக் கொடுத்தார்? அரசியல் ஊதியமும் இதன் பின்னணியாக இருக்கின்றது. மேலும் கொமேனி எதை-

யும் மதவெறியுடன் செய்பவர்; மன்னர் ஷாவை ஆட்சியிலிருந்து அகற்றத் தீவிர மதக் கொள்கையைப் பயன்படுத்தினார். அதன் பின், ஷியா, சுன்னி (இரண்டு இருவகை இசுலாமிய மதப் பிரிவுகள். கத்தோலிக்கம், பிராட்டசுடண்டு—என்பவை போல.) வேறுபாடு காரணமாக ஈராக்குடன் ஒன்பது ஆண்டுகள் போரிட்டார். இதில் பல இலக்கம் பேர் மாண்டனர். போர் தொடங்கியபோது ஈரானின் கன்னெய் (பெட்ரோல்) இருப்பின் மதிப்பு 20 கோடி (பில்லியன்) டாலராக இருந்தது. சண்டையின் முடிவில் இது 8 கோடியாகக் குறைந்துவிட்டது. கடுமையான பொருளியல் நெருக்கடி. எனவே இறுதியில் ஈராக்குடன் ஒப்புரவான ஒப்பந்தத்தைக் கொமேனி வேண்டா வெறுப்பாகச் செய்து கொள்ள நேரிட்டது. இத்தோல்வியை மறைக்கவும் உலகம் முழுவதும் உள்ள முகமதியர்களுக்குத் தலைவன் நானே என்று பறைசாற்றிக் கொள்ளவும்தான் சாலமன் ருசுட்டிக்கு இறப்புத் தண்டனை கொடுத்தார்.

கொமேனியால் கொலைத் தண்டனை வழங்கப்படவும் உலகம் முழுவதும் வாழும் முகம்மதியார் கொதித்தெழவும் காரணமான சாத்தானின் கட்டளைகள் என்ற நூலில் சாலமன் ருசுட்டி அப்படி என்னதான் எழுதியிருக்கிறார்?

சாத்தானின் கட்டளைகள் என்பது ஒரு கதை நூல். இக்கதை முழுவதும் மதத்தைப் பற்றியது அன்று; பல செய்திகள் பற்றி இதில் எழுதியுள்ளார். கதையில் ஒரு கனவுக் காட்சி வருகின்றது. இதில்தான் சிக்கலுக்குரியதாகிவிட்ட மதம் பற்றிய கருத்துகள் உள்ளன.

சாலமன் ருசுட்டி பம்பாயில் பிறந்து வளர்ந்தவர். இங்கிலாந்தில் கல்வி பயின்று அந்நாட்டுக் குடிமகனாக இப்போது இருப்பவர். பிறப்பால் முகமதியர். சிந்தனையால் கடவுள் மறுப்பாளர். எனவே, கடவுள், மதம் தொடர்பாக மாறுபாடான கருத்துடையவர். 'நான் பிறந்து வளர்ந்த இசுலாம் பற்றிட்டுமே நன்கு அறிவேன்.' எனவே இது முகமது நபி மெக்காவில் ஒரே கடவுள் கொள்கையை வெளிப்படுத்துவதற்கு முன் அங்கு 300 கடவுள்கள் வழிபாட்டில் இருந்தன. சிலை வழிபாடு மேலோங்கியிருந்தது. பல கடவுள் கொள்கையையும் சிலை வழிபாட்டையும் முகமது நபி கண்டித்தார். எனவே அவரையும் அவருடைய ஆதரவாளர்களையும் மெக்காவிலிருந்து அன்றைய ஆட்சியாளர்கள் விரட்டி அடித்தனர். அவருடைய ஆதரவாளர்கள் இதனால் பல துன்பங்களுக்கு ஆளாயினர், இந்நிலையில் ஓர் ஒப்புரவு முயற்சியை முகமதுநபி தந்திரமாக மேற் கொண்டார். ஆட்சியாளர்கள் மனநிறைவு கொள்ளும் வகையில் மெக்காவில் அல்-லத், அல் ஹஜ்ஜா என்ற இரண்டு சிலைகளை மட்டும் அல்லாவின் தூதுவர்கள் என்று வணங்கினார். இதனால் மெக்காவிலிருந்து விரட்டப்பட்ட அவருடைய ஆதரவாளர்கள் தாயகம் திரும்பினர். முகமதுநபி தம் சாய்காலை வளர்த்துக் கொண்ட பின், தாம் அந்த இரண்டு சிலைகளையும் அல்லாவின் தூதுவர்கள் என்று

வணங்கியது தவறு என்பதை உணருவதாகச் சொன்னார். சாத்தானின் ஏவலுக்கு ஆட்பட்டு ஏமாறிப் போனதால் அந்த இரண்டு சிலைகளையும் வணங்கி விட்டேன் என்று கூறினார். சாத்தானின் கட்டளைக்கு முகமதுநபி ஆட்பட்டதை நடுவப்படுத்தியே தம் நூலுக்குச் சாத்தானின் கட்டளைகள் என்று சாலமன் ருசுட்டி பெயரிட்டார்.

இசுலாம் மத ஆய்வாளர்களில் சிலர் முகமதுநபி சாத்தானின் கட்டளைக்கு ஆட்பட்டு இரண்டு சிலைகளை வணங்கியது உண்மையே என்று கூறுகின்றனர். வேறு சிலர் இது முகமதுநபியை இழிவு படுத்த பகைவர்களால் நுழைக்கப்பட்ட இடைச் செருகல் என்று கூறுகின்றனர்.

'சாத்தானின் கட்டளைகள்' நூலில் ஒருவர் புதிய மதத்தை நிறுவ முயற்சி செய்கின்றார். இவர் விலைமகளிர் விடுதி ஒன்றையும் நடத்துகின்றார். இந்த விலை மகளிர்க்கு முகமது நபியின் மனைவியர் பெயர்களைச் சூட்டி இழிவு படுத்தியிருக்கிறார் சாலமன் ருசுட்டி என்று குற்றம் சாட்டுகின்றனர். வரலாற்றுப்படி முகமது நபிக்கு 13 மனைவியரும் 27 வைப்பாட்டிகளும் இருந்தனர் என்பதையும் இங்கு மனங் கொள்ளல் வேண்டும்.

சாலமன் ருசுட்டி தாம் பிறந்து வளர்ந்த மதத்தைப் பற்றித்தான் திறனாய்வு செய்திருக்கிறார். தாம் பிறந்து வளர்ந்த மதத்தைப் பற்றி மட்டுமன்றி மற்ற மதங்களையும் தம் அறிவு கூறும் வழியில் ஆய்வு செய்வதற்கு உலகில் எவர்க்கும் உரிமை உண்டு. உலகத்தில் உள்ள எல்லா மதங்களும் அறிவுக்குப் பொருந்தாத, காலத்திற்கு ஒவ்வாத பொய்களையும், வடிகட்டிய கற்பனைகளையும், புரட்டுகளையும் கொண்டிருக்கின்றன. இவற்றைக் கருத்துப் பரப்புதலும் செய்கின்றன. மக்கள் இதை நம்பவேண்டும் என்றும் கூறுகின்றன. இத்தகைய மதக் கருத்துகளை எவ்வாறு நம்புகின்றார்களோ, உண்மை என்று கடைப்பிடிக்கிறார்களோ, அது போன்றே இவற்றை மறுப்பதற்கும், இவை பொய், புரட்டு என்று கூறுவதற்கும் எவர்க்கும் உரிமை உண்டு.

இந்து மதமும், பௌத்தமும், சமணமும் மற்றும் சில மதங்களும், ஏசுகிறித்து பிறந்ததாகக் கூறப்படும் காலத்திற்கு முன்பே தோன்றியவை. ஏசுநாதர் கிறித்தவ மதத்தை நிறுவினார். அதன் பின் சில நூற்றாண்டுகள் கழித்து முகமதுநபி இசுலாம் மதத்தை உண்டாக்கினார். இந்த மதங்கள் ஏற்பட்டு இன்று பல நூற்றாண்டுகளாகிவிட்டன, இந்த மதங்கள் தோன்றிய காலத்தில் இருந்த புற-அகச் சூழ்நிலைகள் இன்று கிட்டத்தட்ட முற்றிலுமாக மாறிவிட்டன. மாந்தனும் வரலாற்றின் கால ஓட்டத்தில் ஆயிரக்கணக்கான மாற்றங்களை ஏற்றுக் கொண்டான். ஆனால், பல நூற்றாண்டுகளுக்கு முன் கூறப்பட்ட மதக் கருத்துகள் மட்டும் மாறாதவை, அவற்றை அப்படியே நம்பவேண்டும் என்பது எப்படி அறிவுடைமையாகும்? உலகில் உள்ள உயிரற்ற பொருள்கள் கூட, ஒவ்வொரு நொடியும் இயங்கிக் கொண்டும், மாறிக்

இந்தியாவில் பெண்ணடிமை!

இந்தியப் பெண்களின் அடிமைத்தனத்தைப் பற்றிக் காந்தி-யடிகள் கீழ் வருமாறு கூறுகிருர்.

''இந்துக் குமுகாயம் ஒரு பெரிய தவறிழைத்துவிட்டது. கணவனுக்கு மனைவியை அளவுக்கு மீறி அடிமைப்படுத்திவிட்டது; மனைவி என்ருல் தனக்கெனறு ஒன்றுமில்லாமல் கணவனுக்-குள்ளேயே ஒன்றித்துவிட வேண்டியவள் என்னும் நிலைமையை ஏற்படுத்திவிட்டது. இதன் பயனுகக் கணவன், சில சமயங்களில் இல்லாத அதிகாரங்களையெல்லாம் செலுத்தத் தொடங்குகிருன். கடைசியில் விலங்காகவே ஆகிவிடுகிருன்.''

''பெண் உரிமையைப் பொறுத்த அளவில் நான் எதையும் விட்டுக் கொடுத்துவிடுகிறவன் அல்லன். ஆண்களுக்குச் சட்ட அடிப்படையில் என்னென்ன வசதிகள் இருக்கின்றனவோ, அந்த வசதிகள் யாவும் பெண்களுக்கும் இருக்கவேண்டும். வேற்றுமை பாராட்டாது பெண்களையும், பிள்ளைகளையும் ஒரே மாதிரி சம-மாக நாம் நடத்தவேண்டும்.''

''கடவுள் பிறப்பிலே பெண்ணைவிடப் பெருமை மிக்க படைப்பு வேெருன்றில்லை. அத்தகைய பெண்ணைக் காமக் கருவி-யாகக் கருதினுல், நாம் விலங்கைவிடக் கீழான நிலையை அடைந்துவிடுவோம். அதைக் காட்டிலும் மக்களினமே அழிந்தொழிந்து போவது தாழ்வில்லை என்றே நான் சொல்லுவேன்.''

(முன் பக்கத் தொடர்ச்சி)

கொண்டும், வளர்ந்து கொண்டும் இருக்கின்றன. ஆனுல் பல நூற்றுண்டுகளுக்கு முன் கூறப்பட்ட மதக் கருத்துகள் மட்டும் மாருதவை. அவற்றை அப்படியே நம்பவேண்டும் என்பது எப்படி அறிவுடைமை ஆகும். உலகில் உள்ள உயிரற்ற பொருள்கள்கூட ஒவ்வொரு நொடியும் மாறிக் கொண்டும் வளர்ந்து கொண்டும் இருக்கின்றன. ஆனுல் மதக் கருத்துகள் மட்டும் மாருதவை; கடவுளால் கூறப்பட்டவை; எனவே மாற்ற முடியாதவை என்று சொல்லப்படுவது ஏமாற்றுத் தனமேயன்றி வேறென்ன?

''இன்று இசுலாம் மதச் சடங்குகள் சீர் செய்யவேண்டியவை. என்று துணிந்து கூறுவேன்: நீங்களும் சீர்திருத்த வழி தேடுங்கள்; எக்காலத்திற்கும் ஏற்ற மதமென்ருல், காலத்திற்கு ஏற்றபடி தானுகவே மாறவோ, மாற்றிக் கொள்ளவோ வசதியாயிருக்கும் என்பதில் அச்சமோ, அவநம்பிக்கையோ கொள்ளாதீர்கள்! இருட்டானுல் விளக்கைக் கொளுத்தி வைத்துக் கொள்ளுங்கள். பகலானுல் விளக்கை அணைத்துவிடுங்கள் என்றுதான் பகுத்தறிவுள்ள வழிமுறை சொல்லியிருக்கும். ஆகவே காலப் போக்குடன் கலந்து கொள்ள அச்சப்படாதீர்கள்.''

—முசுலீம் மக்களிடையே பெரியார் ஈ. வே. இரா. பேசியது. (குடியரசு 1—2—1931; பெரியார் ஈ. வே. இரா. சிந்தனைகள்-பக்கம் 1372)

—நன்றி. 'சிந்தனையாளன்' —ஏப். 89

''பெண் என்றால் ஈகத்தின் (தியாகத்தின்) வடிவம் என்று கருதுகிறவன் நான். ஆயினும் ஆண்களுக்கில்லாத அளவற்ற ஆற்றல், தங்களிடம் உண்டு என்பதைத் தீயூழால் பெண்கள் மறந்தே போனார்கள்.''

''தாளின்மீது தூவலைக் கொண்டு எழுதத் தொடங்கு முன் பெண்களை உங்களின் சொந்தத் தாய் போல எண்ணிக் கொள்ளுங்கள். அப்படி எண்ணினால் தாகத்தினால் அல்லற்படும் நிலத்திற்கு எப்படி வானத்திலிருந்து இன்பம் தரும் மழை கிடைக்கிறதோ, அதேபோல, உங்கள் எழுதுகோலிலிருந்து மிகத் தூய்மையான இலக்கியம் பிறக்கும்.''

''துன்பத்தைக் கண்டு உருகுகிற அருள் உள்ளம் பெண்களுக்கு உண்டு. உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற முத்திரையோடு கடவுள் மாந்தனைப் படைக்கவில்லை. பிறப்பைக் கொண்டு ஒரு பெண்ணையோ, ஆணையோ, தாழ்ந்தவர், தீண்டத்தகாதவர் என்று சொல்லி மக்கள் பிறவியைச் சிறுமைப்படுத்தும் எந்த நூலும் (சாத்திரமும்) நமது நம்பிக்கையைப் பெறமுடியாது. கடவுளையும் கடவுளுக்கு நிகரான உண்மையையும் மறுப்பதாகும் அது.''

''புதிதாய் ஓர் உயிரைப் படைப்பதென்பது கிட்டத்தட்ட தெய்வத் தன்மையானதொரு செயல். நான் சொல்வதெல்லாம் அந்தச் செயலிலே தெய்வத்தன்மை பொருந்திய முறையில் ஈடுபடவேண்டுமென்பதுதான். அஃதாவது, ஆணும் பெண்ணும் புதியதாய் ஓர் உயிரைப் படைத்தெடுக்கவேண்டும் என்னும் ஆசையைத் தவிர; வேறு ஆசை எதுவுமே இல்லாமல் ஒருவரையொருவர் அணுகவேண்டும்.''

''மனைவியை இழந்த கணவனுக்கு மறுமணம் செய்துகொள்ள எவ்வளவு உரிமை இருக்கிறதோ, அவ்வளவு உரிமை ஒவ்வொரு கைம்பெண்ணுக்கும் உண்டு என்பதாக நான் பலமுறை சொல்லியிருக்கிறேன்.''

—காந்தியெழுதிய 'பெண்களுக்கு' என்னும் நூலிலிருந்து.

காந்தியடிகளும் அறிஞர்கள் பலரும் இவ்வாறு பல வகையில் பெண்களை அடிமைத்தனங்களிலிருந்து விடுவிக்கப் பலவாறு கூறியிருந்தாலும், இந்தியாவில் பெண்களின் அவலநிலை எப்படியிருக்கிறது. இதோ, புள்ளி விளக்கங்கள் கூறுவதிலிருந்து அவர்களின் உண்மையான நிலைகளை அறிந்து கொள்ளுங்கள். இதில் உள்ள புள்ளி விளக்கங்கள் 1985ஆம் ஆண்டில் தில்லியிலுள்ள பெண்கள் நலவாழ்வுக் கழகம் (Women's welfare society) தந்த செய்திகள்.

இவற்றைப் படிக்கின்ற ஒவ்வோர் ஆணும் தங்களால் இயன்ற அளவில் பெண்ணடிமை நீக்கத்திற்குத் துணை செய்ய உறுதி கொள்ளவேண்டுமன்றோ? மற்றப் பெண்கள் நிலையில் அவர்களுடைய உரிமைக்குப் பாடுபட இயலவில்லையானாலும், தங்கள்

குடும்பங்களைப் பொறுத்த அளவிலாகிலும் அவ்வாறு செய்வது காலப் போக்கில் மிகுந்த பயன்களைத் தரலாம் அன்றோ? இவற்றைப் படித்து விட்டுப் படித்த அளவில் விட்டுவிடாமல். மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறி உண்மைகள் பரவ உதவியாயிருங்கள்.

இந்தியாவில் ஆண்டு ஒன்றில் திருமணம் செய்து கொள்ளும் பெண்கள் ஏறத்தாழ 6½ கோடி பேர். ஆனால் அவர்களுள் பல வகையான கொடுமைகளால் செத்துப்பிணமாகும் பெண்களும், சாகாமல் செத்துக் கொண்டிருக்கும் பெண்களும் எத்தனை ஆயிரங்கள். கீழே பாருங்கள்!

○ பிள்ளைக் கொடை (வரதட்சணை) நிலுவைக்காக, மணமகன் வீட்டார் கொடுத்த தொல்லைகளைப் பொறுக்க முடியாமல் தற்கொலை செய்து கொண்ட பெண்கள் : 4769 பேர்.

○ பிள்ளைக் கொடை (வரதட்சணை) நிலுவைக்காகச் சேலையில் தீப்பிடித்து இறந்ததாகத் தெரிவிக்கப்பட்ட பெண்கள் : 6414 பேர்.

○ மண்ணெய் அடுப்பு (Stove) வெடித்து இறந்ததாகத் தெரிவிக்கப்பட்ட பெண்கள் : 2,143 பேர்.

○ தூங்கும்போது கணவனால் கழுத்து நெரிக்கப்பட்டு இறந்த பெண்கள் : 3017 பேர்.

○ சீர்வரிசை சரியாகக் கொண்டு வரவில்லை என்று கணவன் மாமியார், கணவர் அவர் தம்பிகள் ஆகியோரிடம் அடி உதை பட்டுத் துன்பப்பட்ட பெண்கள் : 3514 பேர்.

○ காதலித்துப் பின் திருமணம் செய்ய மறுத்ததால் அவமானம் தாங்காமல் உயிரை விட்ட பெண்கள் : 8432 பேர்.

○ கணவன் மறுமணத்திற்குத் தாங்களே முன் வந்து(!) இசைவு தந்த பெண்கள் : 1009 பேர்.

○ நடத்தையில் ஐயம் என்று குற்றம் சுமத்தி மண விலக்குக்கு ஏற்பாடு செய்யப்பட்ட பெண்கள் : 8719 பேர்.

○ திருமணம் செய்த பின்னால். தில்லி, பம்பாய். கல்கத்தா என்று சிவப்பு விளக்குப் (விலை மகளிர்) பகுதிகளில் விற்கப்பட்ட பெண்கள் : 9427 பேர்.

○ தங்களின் பதவி உயர்வுகளுக்காக மேலதிகாரிகளின் உடற்பசியைத் தீர்க்க தங்கள் கணவர்களால் பலியாக்கப்பட்ட பெண்கள் : 1835.

○ அழகான அடுத்தவன் மனைவியை நுகரத் தன் மனைவியை அடுத்தவனுக்குக் காணிக்கையாக்கப் பட்ட பெண்கள் : 2593 பேர்.

○ நாத்துனார், அளியர் (மைத்துனர்) கொடிய செயல்களால் தொல்லைப்பட்ட பெண்கள் : 2593 பேர்.

○ கணவரால் துரத்தப்பட்டு வேறு வழியின்றித் தானே சிவப்பு விளக்குப் பகுதிகளுக்குச் சென்ற பெண்கள் : 3741 பேர்.

○ : 1345 : அன்பு கனிந்த ஐயா! வணக்கம், தங்களின் மேலான நலங்காண நாட்டம்!

நடமாடும் "திருவள்ளுவராகிய," தாங்கள் தமிழினமும், தமிழ்மொழியும், தழைத்தோங்க அயராத தொண்டு செய்ததையும், தமிழ்மொழிக்காகத் தம்மையே ஈகம் செய்து ஆற்றும் தொண்டினையும் யாவரும் அறிவர்;

இன்று ஆளும் அரசு தமிழன் ஆளும் அரசு. ஆகவே தங்களைப் போன்ற உண்மைத் தமிழறிஞர்களை நினைவு கூர்ந்து அவர்களுக்கு இடையூறு செய்யாமல் இனம், மொழி, நாடு என்ற மூன்றும் செம்மையுடன் வளரத் துணை செய்வார்கள் என்று நம்புகின்றேன். நீங்கள் எல்லா நலமும்—பெற்றுப் பல்லாண்டு—திருவள்ளுவர்போல இந்தத் தமிழ் மண்ணில் நிலைத்த பெரும்புகழுடன் வாழ, தமிழன்னையின் அருள்தாள் பணிகின்றேன். அன்பன் தமிழ்த் தொண்டன், —பாவலர். தாழை. ந. இளவழகன், மணப்பாறை.

○ : 1346 :

"தாளி லாளர் வேளா ரல்லர்
வருகெனல் வேண்டும் வரிசை யோர்க்கே
பெரிதே யுலகம் பேணுநர் பலரே
மீளி முன்பி னாளி போல
உள்ள முள்ளவிந் தடங்காது வெள்ளென
நோவா தோன்வயிற் றிரங்கி
வாயா வன்கனிக் குலமரு வோரே."

—புறம் உ0எ.

—சீனி: செந்தேவன், அனுப்பப்பட்டி.

○ : 1347 : அன்பார்ந்த ஐயா, வணக்கம், நலம். மாறுபட்ட அரசியல் சூழ்நிலை அனைவர்க்கும் நலம் பயக்கும் என எண்ணுகிறேன். தங்கள் நலத்தில் எனக்கு எப்போதும் அக்கறையுண்டு என்பதைத் தாங்கள் அறிவீர்கள். தாங்கள் கடந்த முப்பதாண்டுகளாக ஆற்றிவரும் தனித் தமிழ்ப் பணி வீணாகி விடக்கூடாது என்பதுஎன் கவலை. பல்வேறு சூழ்நிலைகளில் வடிவங்களின் மாற்றத்தால் ஏற்பட்ட வாட்டங்கள் மறையவேண்டும்.

நம் தனித் தமிழியக்க வளர்ச்சி நிலை கொள்ளாமற் போனதற்கான கரணியங்களை உள்நோக்கி ஆராய்தல் வேண்டும். உண்மையான குறைகளைக் களைந்துவிட்டு, எல்லாத் தனித்தமிழ் அன்பர்களும் பொதுவான கொள்கையின் அடிப்படையில் ஒன்று சேரவேண்டும். இது பற்றித், தங்கள் கருத்தையறிய விரும்புகிறேன். அனைவரையும் மறுபடியும் ஒன்றிணைக்க முயலுமாறு கேட்டுக் கொள்கிறேன். நேரிய எப்பணியிலும் என்னை ஈடுபடுத்திக் கொள்ள அணியமாகவிருக்கிறேன். ஒரே கொள்கை தனித்தமிழ்! அதற்காக ஒரு மனத்துடன் உழைப்போம்!

—க. தமிழமல்லன், புதுச்சேரி-9.

○ : 1348 : அன்புடையீர் வணக்கம். எத்தனையோ தொல்லைகளுக்கிடையில் தாங்கள் உழன்று கொண்டுள்ளீர்கள்; இருப்பினும் எப்படித்தான் இத்துணைத் தொல்லைகளையும் தாங்கிக் கொள்ளத் தங்களால் இயல்கிறதோ? அறியேன். இத்தனையும் இந்தக் கேடுகெட்ட தமிழ் நாட்டுக்காக-மக்களின் நன்மைக்காக! எத்துணை தான் எழுதினும், பேசினும், பாடுபடினும் திருந்தாத மக்கள் இந்த நாட்டு மக்கள்! விடுதலையை எண்ணி எண்ணி எழுதினும் விளங்கிக் கொள்ளாத மக்களை எண்ணி எண்ணி மனம் நொந்து போகிறீர்கள். அழியாத-அருமையான இலக்கியப் படைப்புகளை ஆக்கியுள்ளீர்கள். இதிலும் அந்தக் கனியையே-இந்த நாட்டு மக்களுக்காக அன்று, மாந்த இனத்திற்காக 'கனிச்சாறு'களைத் தந்து கொண்டேயிருங்கள்! குழந்தையுள்ளம் கொண்ட எம்போன்றவர்களுக்குத் தாயின்முக மலர்ச்சி இன்பம் தருகிறது! நல்லகாற்று, நல்ல ஒளி, நல்ல நீர், நல்ல உணவு,

Scanned with CamScanner

நல்ல உறையுள், இறுதிவரை-இறக்கும்வரை-பேணும் விடுதலை! நொந்துபோன உள்ளத்தால் உரைக்கவில்லை இதனை; பாறை என்று நன்கு தெரிந்தபின்பும் பசுமை மரங்களை விதைத்துப்பயன் காண எண்ணுதல் வீணே அன்றோ? என்றேனும் ஒருநாள் இதனைத் தாங்கள் எண்ணிப்பார்ப்பீர்கள் என்று இன்று எண்ணுகிறேன் நான்!

—அருள்மணி, பெங்களூர்-46;

○ : 1349 : தனித்தமிழின் விழியே! வணக்கம். தேர்தல் வந்தது. எதிர்பாராத வெற்றியும் கிட்டியது! அமைச்சர்கள், நமைச்சல் கொண்டபின் சொரிந்து-கொள்வது போல, பாராட்டு விழா, வரவேற்பு விழா, நன்றியறிவிப்பு விழா என்றெல்லாம் ஏற்பாடு செய்து, பொன்னான நேரத்தை மண்ணாக்குகிறார்கள்; ஆற்றவேண்டிய கடமைகள் ஆயிரம்! அதில் முதன்மையானதில் முன்னிற்பது மொழிக்கலப்பற்ற—இயன்றவரை தூயதமிழில் இதழ்களை நடத்துவது. 'தமிழ்க்குடிமகன்' என்பதை தமிழ்குடி மகன் என்றும் 'தினகரன்' எழுதுகிறது! அந்தமானைப் பாருங்கள் என்பது போய் அந்த மானை பாருங்கள் என்று எழுதப்படுகிறது. பட்டம் பெற்றோர்களிடையே இந்தப் பாடுபடுகிறது என்னருந்-தமிழ் என்றால், மறைமலையடிகள், பாவாணர், பெருஞ்சித்திரனார் போன்றவர்கள் எல்லாம் கண்ணின் கருமணி போன்று மொழித் தூய்மையைப் பேணிய காலமெல்லாம்-இயற்றிய நூல்களெல்-லாம் கனவாய்க் கற்பனையாய்க் கட்டுக்கதையாய்ப் போய்விடும் போலும்! கலைஞரும்-பேராசிரியரும் இளைஞர் படையும் உரிய நட-வடிக்கையை எடுக்கவில்லை என்றால், பண்பார்ந்த தூயதமிழ்ப்பெண் பாடையேறினாள் என்றேபொருள்! கே. ஆறுமுகம், வெங்காளூர்-46

○ : 1350 : தாங்கள் தமிழ்நிலம் (இதழ் 116) இதழில் எழுதியுள்ள கட்டுரை தி.மு.க. ஆட்சியாளர்களுக்குப் பயன் தரக் கூடியவை; தங்களின் தமிழ்ப்பணியை எப்படிப் பாராட்டுவது என்றே புரியவில்லை; தமிழர்களுக்கு என அல்லும், பகலும் அயராது உழைத்து வருகிறீர்கள். நடுவண் அரசின் கொடுந் தன்மைகளுக்கு எல்லாம் வளையாமல் வீறு கொண்ட அரிமா-வாகத் தமிழகமெங்கும் உலாவரும் தீந்தமிழ்க் காவலர் நீங்கள்! உள்ளத்தில் எழும் எண்ணங்களை எல்லாம் எழுத்து வடிவில் மக்களுக்குத் தரும் நற்றமிழ்க் காவலர் நீங்கள்!

தமிழ் நிலம் உள்ளவரை தாங்கள் பல நூற்றாண்டு வாழ்ந்து எங்களுக்கு வழி-காட்டியாக அமையவேண்டும் என்பதே எனது ஆவல்; தங்கள் அன்புள்ள, -தொ, எழில்முதல்வன், களமருதூர்;

○ : 1351 : ஆருயிர்ச் செந்தமிழ்க் காவலரே! வணக்கம். தங்களின் உளம், உடலம், நலம், வளம் 'சிறந்துமிக் கோங்குக' என இறையருளை இறைஞ்சி; வாழ்த்தி மகிழ்கிறேன்!

''உரையினை ஈன்றவள் செந்தமிழ் அன்னை'' எனப் பாவேந்தர் பெருமைப்பட்ட தமிழன்னையைச் சிறுமைப்படுத்த, இன்றைய மக்கள் சிலருக்குத் 'தமிழன்னை' எனத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் பட்டமளித்துச் சிறப்பித்த கெடுவினையைக் கேள்வி-யுற்றுச் செந்தமிழ் நெஞ்சம், தென்மொழியின் துயரச் செய்தி-யைக் கண்டதுபோல், உயிர்த்துடிப்புடன் பதைபதைத்தது! அப்பட்டமளிப்பு, அருந்தமிழைச் சிறுமையாக்கும் செயலே என-வும், அப்பட்டமளிப்பைச் செல்லாததெனவும் சட்டப்படி அற-மன்றத்தில் உரிமைவிளம்பல் (Declaration) பெற்றுத் தமிழ்ப் பெருமையை நிலைநாட்டல் செய்தக்கச் செயலென 'ஆவது அறிவார் அறிவுடையார்' எனும் அனைவரும் உணர்வர்.

— புலவர். கோ. உள்ஒளி. திருப்பத்தூர் (வ.ஆ.)

Scanned with CamScanner